விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 25 திங்கட்கிழமை (11.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 327


## பொதுநலவாய மாநாட்டுக்கான முன்னோடிச் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் எதிர்வரும் 15 ஆம திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள பொதுநலவாய அரச தலைவர்களின் 23 ஆவது உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக நேற்று இரண்டு மாநாடுகள் ஆரம்பமாகின.

உலகத்தை ஒன்றிணைக்கும் தேசம் என்ற மகுடத்தில் இலங்கையில் முதற் தடவையாக நடைபெறும் பொதுநலவாய அமைப்பின்மாநாட்டின் தொடக்கமாக இளைஞர் மாநாடு அம்பாந்தோட்டையிலும் - பொதுநலவாய மக்கள் மன்றம் ஹிக்கடுவையிலும் ஆரம்பமாகின.

இரண்டு மாநாடுகளும் எதிர்வரும் 14 ஆம் திகதி நிறைவடையவுள்ளன. பொதுநலவாய இளைஞர மாநாட்டை 20 ஆம் பக்கம் பார்க்க




பொதுநலவாய இளைஞர் மாநாட்டை அம்பாந்தோட்டையிலுள்ள சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்த ஆரம்ப வைபவத்தில் பொதுநலவாய அமையத்தின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அத்துடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# கலந்து கொள்ளாதது வருத்தமளிக்கிறது

## இந்தியப் பிரதமர் கடிதம்



(புதுடில்லி)

கொழும்பில் நடைபெறவிருக்கின்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளாமை வருத்தமளிப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மூலம் இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டிருக்கின்றது. மாநாட்டில் தான் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இலங்கையில் இந்த வாரம் நடக்கவுள்ள பொதுநலவாய மாநாட்டில தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார். பொதுநலவாய மாநாட்டை மன்மோகன் சிங் பகிஷ்கரிக்க வேண்டும் என்று இந்தியாவுக்குள்ளே அழுத்தங்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் அரச படையினரால் போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதாக வெளியான குற்றச்சாட்டுக்களுக்கு மத்தியில் இந்தியா பொதுநலவாய மாநாட்டை முழுமையாக புறக்கணிக்க வேண்டுமென்று தமிழகத்தில் அரசியல் கட்சிகள் கோரிவருகின்றன.

இந்திய அரசின் முடிவு அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டால், பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கும் இரண்டாவது அரச தலைவராக 19 ஆம் பக்கம் பார்க்க

# மன்மோகன் சிங்கின் முடிபு இலங்கைக்கு தோல்வியல்ல

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

பொதுநலவாய தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டில இந்தியப்பிரதமர் கலந்து கொள்ளாதது தமக்கு தோல்வி இல்லை என்று அரசாங்கம் கூறியுள்ளது.

உள்நாட்டு அரசியல் காரணங்களினாலேயே கொழும்பில் நடக்கும் மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாதிருக்க முடிபு செய்துள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

மன்மோகன் சிங் வராமல் இருக்க முடிபு செய்திருப்பது எங்களின மாநாட்டின் வெற்றியைப் பாதிக்காது. அதனை நாங்கள் ஒரு பிரச்சினையாகக் கருதவில்லை என்றும் ஜி.எல்.பீரிஸ் 20 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - இந்திய உறவு ஒருபோதும் பாதிப்படையாது

### குர்ஷித் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவிருக்கின்ற பொதுநலவாய மாநாட்டுக்குப் பிரதமர் மன்மோகன் சிங் போகாததை பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவித்துள்ள வெளியுறவு அமைச்சர் சல்மான்குர்ஷித், இதனால் இலங்கையுடனான உறவில் மாற்றமோ, பாதிப்போ வராது என்றும் தெரிவித்துள்ளார்.

சகல பொதுநலவாய மாநாடுகளுக்கும் பிரதமர் போவதில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்றும் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பிரதமரின் முடிவை ஒரே கோணத்தில் பார்க்கத் தேவையில்லை. அனைத்து பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கும் பிரதமர் போவதில்லை என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். பொதுநலவாய மாநாட்டுக்கு பிரதமர் போகாததற்குப் பல காரணங்கள் உள்ளன. 20 ஆம் பக்கம் பார்க்க

## ஆளுநரின் உரையை புறக்கணிக்க முடிபு

(கொழும்பு)

வடக்கு மாகாணசபையின் கூட்டத்தில் ஆளுநர் உரையை பகிஷ்கரிக்க உள்ளதாக கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற அங்கத்தவரும் தற்போதைய வட மாகாண சபையினது அங்கத்தவருமான கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில்,

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஜனாதிபதியின் பிரதிநிதியாக விளங்கும் ஆளுநரின் உரையைப் புறக்கணிப்பது என நான் முடிபு செய் 19 ஆம் பக்கம் பார்க்க

## உண்மைகளை கண்டறிய வந்த வெளிநாட்டு எம்.பிக்கள் தடுத்து வைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உண்மையைக் கண்டறியும் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த அவுஸ்திரேலிய செனட் சபை உறுப்பினர் ஒருவரையும், நியூசிலாந்து கிறீன் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் இலங்கை திருப்பி அனுப்பியுள்ளது.

அவுஸ்திரேலிய செனட் சபை உறுப்பினர் லீ றியானன் மற்றும் நியூசிலாந்தின் கிறீன் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் லோகி ஆகியோரே இலங்கை அரசாங்கத்தால் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு உண்மையைக் கண்டறியும் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த இவர்கள் இருவரையும் நுழைவு அனுமதி விதிமுறைகளை மீறியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் குடிவரவுத்திணைக்கள அதிகாரிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தடுத்து வைத்துள்ளனர்.

சுற்றுலா நுழைவு அனுமதிபெற்று வந்த இவர்கள் இருவரும் தமிழ்த் தேசியக்கூட்டமைப் 20 ஆம் பக்கம் பார்க்க

## நலன்புரி முகாமில் தங்கியிருந்த 1033 குடும்பங்கள் குடியமர்வர்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி



(யாழ்ப்பாணம்)

யுத்தம் காரணமாக தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் யாழ்மாவட்டத்தில் நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்ந்து வரும் 1033 குடும்பங்கள் உடனடியாக மீள்குடியேற்றப்படவுள்ளனர் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். 19 ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மதிப்பு மிக்க வாய்ப்புக்களை இளைஞர்கள் இழந்துள்ளனர்

## ஜனாதிபதி தெரிவிப்பு

போர்க்காலத்தில் இலங்கையின் இளைஞர்கள் மதிப்புமிக்க வாய்ப்புக்களை இழந்தனர் என ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாகம்புர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமான பொதுநலவாய நாடுகளின் 9-வது இளைஞர் மாநாட்டை ஆரம்பித்து வைத்து பேசும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.



மக்கள் தொகையில் செயற்பாட்டு ரீதியான அணியாக இருக்கும் .இளைஞர்களை அபிவிருத்தி செயற்பாடுகளில் இணைத்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச இளைஞர் மாநாடு அடுத்த வருடம் மே மாதம் இலங்கையில் நடைபெறவுள்ளது. ஆசிய நாடொன்றில் அந்த மாநாடு நடத்தப்படும் முதலாவது சந்தர்ப்பம் அதுவாகும்.

இலங்கை மூன்று தசாப்தங்களாக பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன் அது நாட்டின் இளைஞர்களுக்கும் பாரிய அடியாக இருந்தது.

போர் நடைபெற்ற காலத்தில் இலங்கை இளைஞர்கள் பல மதிப்புமிக்க வாய்ப்புகளை இழந்தனர்.

பயங்கரவாதிகளினால் பலவந்தமாக படையில் சேர்க்கப்பட்ட இளைஞர்கள் சரணடைந்த பின்னர் மறுவாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்.

பொதுநலவாய நாடுகள், மனிதர்களின் கௌரவம், 'மனிதர்களுக்கு இடையிலான சமத்துவத்தை சீரமைக்கும் கொள்கைகளை பின்பற்றி வருகின்றன என்றார். (எ-8)



இம்மாதம் 15-ம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கான வரவேற்பு நடன ஒத்திகைக் காட்சி...

# போரினால் பாதிக்கப்பட்டோரின் கைவினைப் பொருட்கள் கண்காட்சியில்!

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கைவினைப் பொருட் கண்காட்சியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் கைவினைப் பொருட்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை கொழும்பில் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கைவினைப் பொருட்கள் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருளான பன்புல் மூலம் தயாரிக்கப்பட்ட தொப்பிகள், கைப்பைகள், மேசை விரிப்புகள் மற்றும் அலங்கார பொருட்கள் என 25 வகையான பொருட்கள் பார்வைக்கு வைப்பதற்காக நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

. கிழக்கு மாகாணத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உள்நாட்டு தன்னார்வ தொண்டர் அமைப்பான உலக நண்பர்களின் தேவைகளுக்கான அமைப்பு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்த தயாராகி வருகின்றது.

யுத்தத்தினால் அங்கவீனமடைதல், குடும்பத் தலைவரின் இழப்பு உட்பட பாதிப்புக்குள்ளான பெண்களின் நலன்களை பேணும் அமைப்பாக இந்த அமைப்பு செயல்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்துவதற்கு தெரிவான இரண்டு அமைப்புகளில் தமது அமைப்பும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக உலக நண்பர்களின் தேவைகளுக்கான அமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ஏரம்பமூர்த்தி கங்காதரன் தெரிவிக்கின்றார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்களின் உற்பத்திகளை சர்வதேச சமூகத்தின் பார்வைக்கு கொண்டு செல்லவும் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையிடுவதற்கும் கிடைத்த சந்தர்ப்பமாக தான் இதனை கருதுவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார் (எ-8)

# தம்புள்ள இந்துக் கோவில் விவகாரம்
# பிரபாவுடன் பேச பௌத்த பிக்கு மறுப்பு

தம்புள்ள பத்திரகாளியம்மன் கோவில் விவகாரம் தொடர்பில் இரு தரப்பினருடனும் பேசி இந்து ஆலயம் அமைப்பதற்கு புதிய இடத்தைப் பெறுவதற்கான விடயங்களில் ஈடுபடுமாறு பிரதமர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சம்பந்தப்பட தலைமை பௌத்த பிக்குவான ஸ்ரீ சுமங்கல தேரரை சந்திப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் கேட்டுக் கொண்டதற்கு முதலில் சந்திப்பதற்கு கடந்த சனிக்கிழமை ஒப்புக் கொண்ட பௌத்தபிக்கு பின்பு சமரசம் தேவையில்லை என்று சந்திக்க மறுத்து விட்டதாக ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக பிரபா எம்.பி கருத்து தெரிவிக்கையில்,

முதலில் சந்திக்க ஒப்புக் கொண்ட தலைமை பௌத்த பிக்கு பின்பு இந்து கோவிலுக்கு இதன் மூலமாக மாற்று இடம் கிடைக்கும் என்பதை தெரிந்து கொண்டதனால் என்னை சந்திக்க மறுத்துவிட்டார். இந்த பௌத்த பிக்குவின் செயலாளர் ராஜபக்ஷ மூலமாக சமரசத்திற்கு, தான் தயார் இல்லை என்று தெரிவித்துள்ளார். இப்படியான பௌத்த இனவாதம் கொண்ட பௌத்த பிக்குவை சந்திக்க வேண்டிய அவசியமும் இப்பொழுது எனக்கு இல்லை. அதே நேரம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினரை சந்திக்க மறுக்கும் இந்த பௌத்த இனவாத தேரர் தம்புள்ளையில் வசிக்கும் தமிழ் மக்கள் சம்பந்தமாக எப்படி செயல்பட்டிருப்பார் என்பது தெளிவாக தெரிகிறது. ஏற்கெனவே 15 வருடங்களுக்கு முன்பு வேறு இடத்திலிருந்த ஒரு கோவிலையும் இவர் அப்புறப்படுத்தியிருக்கின்றார். இவரை சந்திக்க நினைத்தது ஒரு மரியாதை நிமித்தமே. பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் இவரை நான் ஒரு துரும்புக்கு கூட கணக்கெடுக்க விரும்பவில்லை. தமிழ் ஊடகங்களுக்கு மட்டும் நான் இதை தெரிவித்து அரசியல் செய்ய விரும்பவில்லை. மாறாக இவரது இனவாதத்தை சிங்கள ஊடகங்களிலும் அம்பலப்படுத்துவேன்.

இருப்பினும் இந்து ஆலயத்திற்கு புதிய இடத்தைப் பெற்றுக் கொடுப்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். அது மட்டுமின்றி தம்புள்ள பகுதி முஸ்லிம் சமூகமும் என்னிடம் கைகோர்த்துள்ளார்கள். புதிய இடத்தை நகர அதிகாரசபை வழங்காவிட்டால் இந்த அரசாங்கம் பௌத்த இனவாத அரசாங்கம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு கண்டனங்களை மட்டுமே தெரிவித்துக் கொள்ள முடியும். ஆனால் நான் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட முடியும். நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. பொறுத்திருந்து பார்ப்போம் என்றார். (எ-8)

## கலாசார விழா

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச கலாசார விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பரந்தன் புனித திருச்சிலுவை முன்பள்ளி மண்டபத்தில் கண்டாவளைப் பிரதேச கலாசார பேரவையின் தலைவரும் கண்டாவளை பிரதேச செயலருமான த. முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு. சந்திரகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ. ஸ்ரீனிவாசன், கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஜே. கில்பேட் குணம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-263)

# யுத்தம் முடிவடைந்த பின்னரும் காணி கையகப்படுத்தல் எதற்கு?

## சித்தார்த்தன் கேள்வி



உயர் பாதுகாப்பு வலயங்களாகக் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை குடாநாட்டின் இனவிகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் வகையில் திட்டமிட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்த தூபமிடப்படுகின்றது எனக் குற்றம்சாட்டிய புளொட் அமைப்பின் தலைவரும் வட மாகாணசபையின் உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இவ்வாறான நடவடிக்கையினை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் வலி வடக்கில் காங்கேசன்துறை தொகுதி முழுவதும் உள்ளடங்கலாக இளவாலை வரையில், சுற்றியுள்ள நிலப்பரப்பினை இராணுவம் தமக்குள் வைத்துள்ளது,

அரசாங்கம் இன்றைய நிலையில் யுத்தம் முடிவடைந்து விட்டது என திரும்பத் திரும்ப கூறிவருகின்றது. இவ்வாறானதோர் சூழ்நிலையில் பாதுகாப்பு வலயங்களுக்கு என ஏன் இவ்வளவு பெருவாரியான காணிகளை அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது என்ற கேள்வியுள்ளது? இதற்குப் பின்னால் வேறு நோக்கங்களே இருப்பதாக நாம் பார்க்கின்றோம்.

நாம், மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுகின்றன என்றவுடன் குறித்த பகுதிகளுக்கு நேரில் சென்று எதற்காக வீடுகளை இடித்தழிக்கின்றீர்கள் என இராணுவத்தினரிடம் கேட்டோம். அதற்கு அங்கிருந்த படை அதிகாரி, தாம் வேறு கட்டிடங்களை அமைத்து இராணுவத்தினரையும், அவர்களது குடும்பங்களையும் குடியமர்த்தப் போவதாக வெளிப்படையாகவே கூறினார்.

அத்துடன் அந்த அதிகாரி, யாழ்ப்பாணத்திற்கு வெளியில் உள்ள இராணுவத்தினரை மீளப்பெறவுள்ளதனால் தமக்கு இடவசதிகள் தேவையாக உள்ளதாகவும் அதற்காக இக் காணிகளில் கட்டிடம் அமைத்து உபயோகப்படுத்தப் போவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

கொழும்பில் இருப்பவர்கள் வேறு கருத்துக்களைக் கூறினாலும் இவ் அதிகாரியின் கருத்துக்களை நாம் நிராகரித்துவிட்டுப் பார்க்க முடியாது. இவ்விடயம் தொடர்பில் வழக்குகள் கூடத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும் இந் நடவடிக்கையினை நாம் குடாநாட்டின் குடிப்பரம்பலை மாற்றுவதற்கான ஓர் முயற்சியாகவே பார்க்கின்றோம்.

வன்னியில் அரச காணிகளை பெருவாரியாக எடுக்கின்றனர். யாழில் அதற்கான சூழ்நிலை காணப்படாத நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்களாக மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி அதனுள்ளாக திட்டமிட்ட வகையில் சிங்களக் குடிப்பரம்பலை ஏற்படுத்த அரசாங்கமும் படைத்தரப்பும் முயற்சிக்கின்றன என அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

## இன்று ஒரு தகவல்

### இரு மருத்துவர்கள்

ஒருவர் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்தார். அவருக்கு இரத்தத்தில் கொலஸ்ரோல் அதிகமாகி விட்டது என்று டாக்டர் சொல்லிவிட்டாராம்.

அதனால் டாக்டரின் ஆலோசனைப்படி உணவுக் கட்டுப்பாடு, தேகப்பயிற்சியெல்லாம் செய்து கொண்டு வந்தார். ஓரளவு குணமடைந்தார்.

அந்தச் சமயத்தில் ஊரிலிருந்து ஒரு பாட்டி வந்தார். இவர் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்ததைப் பார்த்து என்ன விடயம் என்று கேட்டறிந்து கொண்டார். டாக்டர் சொல்லியபடியே எல்லாவற்றையும் செய். அத்துடன் நான் ஒரு வைத்தியம் சொல்கிறேன் அதையும் செய் என்று சொன்னார் அந்தப்பாட்டி.

பாட்டி வைத்தியமா?

சரி சொல் என்று அரைமனதுடன் கேட்டார் இவர்.

வேறொன்றுமில்லை. பச்சை வெங்காயம் இருக்குதல்லவா அதில் தினம் ஒன்று சாப்பிட்டுக் கொண்டுவா என்றார்.

பாட்டி சொல்லைத் தட்டக்கூடாது என்பதற்காக இவரும் தினமும் ஒரு வெங்காயத்தை சாப்பிட ஆரம்பித்தார்.

பாட்டி வைத்தியத்தின் பலனை அதன் பின்னர்தான் உணர ஆரம்பித்தார்.

உணவுக் கட்டுப்பாடுகளாலும் தேகப் பயிற்சியினாலும் எந்தளவுக்கு குணம் தெரிந்ததோ அதைப்போல் இரண்டு பங்கு குணம் இந்த வெங்காயத்தில் தெரிந்ததாம். வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் வீட்டில் இருந்தால் இரண்டு டாக்டர்களே வீட்டில் இருப்பது போல் நாம் நினைத்துக் கொள்ளலாம்.

இப்பொழுது மருத்துவ நிபுணர்கள் பலர் ஆராய்ச்சி செய்து பல விபரங்களைக் கூறியிருக்கிறார்கள்.

இதயநோய்கள், புற்றுநோய், இரத்தநாளம் கடினமாதல், ஜலதோஷம், இரத்த அழுத்தம் இப்படியான பல நோய்களுக்கு இவையிரண்டும் கைகண்ட மருந்தாக உபயோகப்படுகிறதாம்.

அதுசரி... வெங்காயத்துக்கும் வெள்ளைப் பூண்டிற்கும் நோயைத் தடுக்கும் அல்லது குணப்படுத்தும் சக்தி எங்கிருந்து கிடைக்கிறது?

அவற்றில் அலிஸின் என்ற எண்ணெய்ச்சத்து இருக்கிறது. ஒரு மாதிரியாக எரிச்சலூட்டும் நெடியை கொடுப்பது இதுதான்.1885 ஆம் ஆண்டு லூயி பாஸ்டர் என்ற விஞ்ஞானி வெள்ளைப் பூண்டுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்தார்.

அமெரிக்க மருத்துவ நிபுணரான டாக்டர் ரூத்லாங் பல ஆராய்ச்சிகள் செய்து இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பவர்கள் சாப்பாட்டில் வழக்கமாக வெள்ளைப் பூண்டு பயன்படுத்திக் கொண்டு வந்தால் இரத்த அழுத்தம் குறையும் என்று கூறியுள்ளார்.

இரத்தம் இறுகிப் போகாமல் தடுக்கும் சக்தி வெங்காயத்திலும் வெள்ளைப்பூண்டிலும் இருக்கிறது என்று ஜப்பான், ஜேர்மன் நாடுகளில் நடந்த ஆராய்ச்சிகள் மூலமாக நிரூபணமாகியிருக்கிறது.

எல்லாவற்றையும்விட முக்கியமாக புற்றுநோயை தடுப்பதற்கும் பூண்டு உபயோகப்படும் போலிருக்கிறது.

நமது உடம்பில் இருக்கும் நல்ல திசுக்களை புற்றுநோய் திசுக்களாக மாற்றுவது கார்சினோஜன் என்ற இரசாயனப் பொருள். அது உருவாவதை இந்த வெள்ளைப் பூண்டு தடுத்து நிறுத்தி விடுகிறதாம். ஆனால் அது எப்படி என்பதை இன்னமும் கண்டு பிடிக்க முடியவில்லையாம்.

வெங்காயத்தில் இருக்கும் செலினியம் என்ற சத்து இரைப்பையில் வரும் புற்று நோயையும் ஏனைய புற்று நோய்களையும் தடுத்து நிறுத்திவிடுகிறது என்று ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதைத்தவிர வெங்காயத்தில் இருக்கும் கந்தக சத்து நோயெதிர்ப்பு சக்தியாகவும் பயன்படுகிறது.

நம் வீட்டுக்குள் ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கும் பாட்டியின் வைத்தியத்தை நாம் நம்ப வேண்டுமானால் பல நிபுணர்களெல்லாம் ஆராய்ச்சி செய்து நிரூபிக்க வேண்டியிருக்கிறது. அந்தளவுக்கு நம் பாட்டி மீது நமக்கு நம்பிக்கை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களை மீள்குடியேற்ற விரைந்த நடவடிக்கை

## ஓரிரு தினங்களில் என்கிறது ஈ.பி.டி.பி.

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் இன்னும் ஓரிரு தினங்களில் மேற்கொள்ளப்படும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வலிகாமம் வடக்குப் பகுதியில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் எனத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களாக காணப்பட்ட பல்வேறு பகுதிகளில் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகளை ஏற்கனவே படிப்படியாக மேற்கொண்ட அமைச்சர், கடந்த மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பதாக இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் தங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் அதற்கான நடவடிக்கைகளை தான் தொடர்ந்து மேற்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தேர்தல் காலம் என்பதால் கடந்த சில மாதங்களாக மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த போதும் தற்போது அந்நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ளார்.

இதன்பிரகாரம் தற்போது யாழ்.குடாநாட்டில் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் இன்னும் ஓரிரு தினங்களில் மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

இதேவேளை வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்ந்துவரும் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதைவிடுத்து வேறு இடங்களில் குடியேற்ற இராணுவத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## வலி.தெற்கு பகுதிகளில் குப்பை அகற்றுவதில் ஒழுங்கீனம்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் குப்பை ஏற்றும் வாகனத்தின் ஒழுங்கீன வரவு காரணமாக அப்பகுதி மக்கள் வீட்டுக்கழிவுகளை உரிய முறையில் வெளியேற்றமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் பல்வேறு அசௌகரியங்களையும் சந்தித்துவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கழிவகற்றும் வாகனங்களின் வரவு சீரின்மையால் இவ்வாகனங்களை எதிர்பார்த்துவிட்டு கழிவுகளை வீதிகளுக்கு எடுத்துவரும் போது சட்டச்சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகவும் இப்பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில் வீட்டுக்கழிவுகளை உடனுக்குடன் அகற்ற வேண்டியிருப்பதுடன், இவ்வாறு கழிவுகள் அகற்றப்படாமையால் துர்நாற்றம் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை மேற்படி பிரச்சினைகளால் சிலர் சன நடமாட்டம் குறைந்த வீதிகளிலும், சுன்னாகம் சந்தைப்பகுதியிலும் வீட்டுக் கழிவுகளை வீசி வருவதாகவும் இதன் காரணமாக சூழல் மாசடைவு ஏற்படுவதுடன் டெங்கு, மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, உரியவர்கள் இவ்விடயம் தொடர்பில் உரியநடவடிக்கை எடுத்து குறித்த பிரதேசமக்களின் பாதுகாப்பை பேண உதவவேண்டுமென அப்பிரதேசமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (செ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 130 | 120 | 100 | 140 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 | 120 |
| தக்காளி | 60 | 70 | 75 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 30 | 25 | 40 |
| கோவா | 40 | 25 | 30 | 60 |
| கரட் | 40 | 40 | 45 | 80 |
| பூசணி | 20 | 20 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 20 | 35 | 60 |
| சின்ன வெங்காயம் | 190 - 200 | 190 | 200 | 220 |
| பெரிய வெங்காயம் | 140 - 160 | 120 | 130 | 200 |
| பாகற்காய் | 100 | 120 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 35 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 120 | 110 | 80 |
| லீக்ஸ் | 60 - 80 | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 10 - 20 | 15 | 30 | 40 |
| கறிமிளகாய் | 90 | 60 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 20 | 50 | 15 | 60 |
| போஞ்சி | 100 | 80 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 15 | 10 | 15 | 25 |
| தேசிக்காய் | 250 | 150 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 35 - 60 | 50 | 40 | 35 - 45 |

## இராசி பலன்

11.11.2013
(ஐப்பசி 25, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
நவமி பின்னிரவு 12.26 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 1.11 மணிவரை
இராகுகாலம் 7.36-9.06 மணிவரை
சுபநேரம் 12.06-1.36 மணிவரை

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறியுண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**இடபம்** சொல்லை செயலாக்கி காட்ட முற்படுவீர்கள், சமுதாயத்தில் உயர் நிலைக்கு வரத்தோன்றும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறியுண்டு.

**மிதுனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் கூடும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கப் படலாம், பிரயாண பயமுண்டு.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், வெளியூர்ப் பயணங்கள் விருப்பத்தை நிறைவேற்றும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு, செய் தொழில் மேன்மையுண்டு, தேக நலன் சீராகும், முயற்சிகள் கைகூடும்.

**துலாம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்** சந்தித்த நபர்களால் சந்தோசம் ஏற்படலாம், உறவினர் வருகையுண்டு, புதிய பொருட்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், கல்வியில் நாட்டம் கூடும்.

**தனுசு** நீண்ட நாளைய பிணக்குகளில் திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்களால் உற்சாகம் பெருகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும், போசன சுகமுண்டு.

**மகரம்** அதிஷ்டகரமான நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வருமானம் திருப்தி தரும், இல்லத் தேவைகள் பூர்த்தியாகும், புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், தொழிலில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் அனுகூலமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் கூடும்.

வளவன்

BUSINESS TODAY
TOP TWENTY FIVE
2012-2013

# சிறந்த 25 நிறுவனங்கள்




பிஸ்னஸ் டுடே சஞ்சிகையின் மூலம் வருடாந்தம் மேற்கொள்ளப படும் 25 சிறந்த நிறுவனங்களின் தரப்படுத்தலுக்கு அமைவாக இந்த ஆண்டும் அதாவது 2012 - 2013 வரையான நிதியாண்டுக் காலப் பகுதியில் மிகவும் சிறப்பாகச் செயற பட்ட 25 சிறந்த பிரஜைகள் கம்பனி கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டன.

Business Today TOP TWENTY FIVE எனப்படும் இவ் விருது வழங்கும் நிகழ்வு அண்மை யில் கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந் தினராக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும், கௌரவ விருந்தி னராக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் பிரபல தொழிலதிபர்கள், வர்த்தக பிரமுகர்கள், இராஜதந்திரி கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள், மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

இத் தரப்படுத்தலில் மீண்டும் ஒரு தடவை ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்ட தன்மூலம் இலங்கையின பலம் பொருந்திய பிரஜைகள் கம்பனி என்ற தகுதியை இது மீளவும் உறு திப்படுத்திக் கொண்டுள்ளது.

குழுமத்தின் மொத்த வருமானம் 85.56 பில்லியன் ரூபாயாக அதிகரித்து 10 வீத முன்னேற்றத் தைப் பதிவு செய்துள்ளது.

இது போக்குவரத்து, பொழுது போக்கு, நுகர்வோர் உற்பத்திகள், சில்லறை வாணிபம் ஆகிய துறை களில் ஏற்பட்ட ஒட்டுமொத்த அதிகரி ப்பாகும்.

கொமர்ஷல் வங்கி, புகிட் டரா ஆகியன முறையே இரண்டாவது, மூன்றாவது இடங்களைப் பெற்றுக் கொண்டன.

500 பில்லியன் ரூபா அடைவை எட்டி 512 பில்லியன் ரூபாய் சொத்துப பெறுமானத்தைப் பதிவு செய்து இலங் கையின் முதலாவது வங்கியாக இலங்கை வர்த்தக வங்கி (கொமர் ஷல் வங்கி) விளங்குகின்றது.

இதன் வரிக்குப் பின்னரான லாபம் 28வீதத்தால் வளர்ச்சி கண்டு 10.098 பில்லியன் ரூபாயைப் பதிவு செய்துள்ளது.

புகிட் டராவின் மொத்த வருமானம் 15வீத அதிகரிப்பை எட்டி 76.1 பில்லியன் ரூபாயாகப் பதிவு செய்துள்ள வேளையில் வரிக்குப் பிந்திய லாபம் 28வீதமாகக் குறை ந்து 9.6 பில்லியன் ரூபாயாக விளங் குகின்றது.

சிலோன் டுபாக்கோ கம்பனி இந்த வரிசையில் நான்காம் இடத் தைப் பிடித்துள்ளது.

ஹட்டன் நஷனல் வங்கி, டய லொக் அக்சியாட்டா, சம்பத் வங்கி, NDB வங்கி, இலங்கை டிஸ்டிலரீஸ் கம்பனி, சிறிலங்கா ரெலிகொம் ஆகியன Business Today TOP TWENTY FIVE விருதுப் பட்டிய லில் முதல் பத்து இடங்களைத் தக்க வைத்துக் கொண்டன.

இப்பட்டியலில் அடுத்த தர வரி சையில் உள்ள நிறுவனங்களாகக் பின்வருவன உள்ளன:

எயிற்கின் ஸ்பென்ஸ் 11ஆம் இடம், ஹேலீஸ் 12ஆம் இடம், நெஸ்லே லங்கா 13ஆம் இடம், DFCC வங்கி 14ஆம் இடம், CT ஹோல்டிங்ஸ 15ஆம் இடம், சென் ரல் ஃபைனான்ஸ் 16ஆம் இடம், LOLC 17ஆம் இடம், பீபள்ஸ் லீசிங் அன் ஃபைனான்ஸ் 18ஆம் இடம், லங்கா IOC 19ஆம் இடம், வலிபல் வன் 20ஆம் இடம், செவ் ரோன் லுபிரிகன்ஸ் 21ஆம் இடம், றிச்சர்ட் பீரிஸ் அன் கம்பனி 22-ம் இடம், செலிங்கோ இன்சூரன்ஸ் 23-ம் இடம், செலான் வங்கி 24-ம இடம், யுனைட்டட் மோட்டர்ஸ் 25-ம இடம். Business Today TOP TWENTY FIVE நிறுவனங்கள் டிசம்பர் 31, 2012 அல்லது மார்ச் 31, 2013 உடன் முடிவடைந்த நிதியாண்டுக் காலப்பகுதியில் அவற்றின் சிறப்பான நிதிசார் செயற்பாடுகளின் அடிப்படையில் தெரிவு செயயப்பட்டிருந்தன.

Business Today TOP TWENTY FIVE தெரிவானது கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யில் பட்டியல்படுத்தப்பட்ட நிறுவன ங்களின் பகிரப்பட்ட தகவல்களை உறுதியாகப் பின்பற்றியுள்ளது.

ஒரு நிறுவனம் ஈட்டும் வருமா னம் மட்டுமே அதன் திறமையை வெளிப்படுத்தும் குறிகாட்டியாக விளங்காது என்பதனால் பிரபல மான பல நிதிசார் தெரிவு முறை களின் அடிப்படையில் அதி சிறந்த பிரஜைகள் கம்பனிகள் தரப்படுத்தப் பட்டுள்ளன.

# ரெலிகொம் மொபிடெல் மூலம் புகையிரத ஆணைத்தாள் வசதி

சிறிலங்கா ரெலிகொம் மொபிடெல் நிறுவனம், தனது mTicket சேவையின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு புகையிரத பற்றுச்சீட்டுக்களை மேலும் இலகுவான முறை யில் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், அரச சேவையில் ஈடுபட்டிருப்போருக்கான புகையிரத பயண ஆணைத்தாள்களை (Warrants) சமர்ப்பித்து புகையிரத பயணச்சீட்டுக்களை ஒதுக்கிக் கொள்ளும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.



இலங்கை புகையிரத திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படும் இந்த திட்டத்தின் ஊடாக இலட்சக் கணக்கான அரச சேவை ஊழியர்களுக்கு தமது நேரத்தை மீதப்படுத்திக் கொள்ளவும், தமக்கு பயணிக்க வேண்டிய இடங் களுக்கான பயணச்சீட்டுக்களை இலகுவான முறையில் ஒதுக்கிக் கொள்ளவும் முடியும்

முதல் கட்டமாக கொழும்பு கோட்டையிலிருந்து பயணத்தை ஆரம்பிக் கும் புகையிரத சேவைகளுக்கான பயணச் சீட்டுக்களுக்கான முற் பதிவு களை மேற்கொள்ள முடிந்தது. ஆனாலும் மொபிடெல் நிறுவனம் மற்றும் இலங்கை புகையிரத திணைக்களம் ஆகியவற்றின் ஒன்றிணைந்த துரிதமான செயற்பாட்டின் காரணமாக, நாட்டின் ஏனைய முன்னணி புகையிரத நிலையங்களுக்கும் இந்த சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இதுபோல கடந்த செப்டெம்பர் 14-ம் திகதி கிளிநொச்சி வரை விஸ தரிக்கப்பட்ட வடக்குக்கான புகை யிரத பாதையில் பயணிக்கும் பய ணிகளுக்கு இந்த வசதியை பெற்றுக் கொடுக்க முடிந்துள்ளதுடன், mTicketing சேவை மூலம் கிளி நொச்சியில் அமைந்துள்ள புகை யிரத நிலையத்திலிருந்தும் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள மொபி டெல் கிளை காரியாலயத்திலிருந் தும் புகையிரத பயணச்சீட்டுக்களை ஒதுக்கி கொள்ள இப்பகுதி மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவையிலிருக்கும் ஊழி யர்கள் தமது புகையிரத பயண ஆணைத்தாள்கள் (Warrants) தொடர்பாக 365 எனும் இலக்கத் துடன் தொடர்பை ஏற்படுத்தி சமர்ப் பக்கும் விபரங்களுக்கு அமைவாக மொபிடெல் நிறுவனத் தின் மூலம் அவர்களுக்கு குறியீட்டு இலக்கம் ஒன்று வழங்கப்படும்.

குறித்த குறியீட்டு இலக்கத்தை யும்தமது புகையிரத பயண ஆணைத தாளையும் (Warrants) இந்த m Ticketing சேவையை வழங் கும் புகையிரத நிலையத்துக்கு சமர்ப் பித்து தமக்குரிய புகையிரத பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ள முடி யும்.

# பொதுநலவாய மாநாடு; புதிய நாணயத் தாள் வெளியீடு

இலங்கையில் பொதுநலவாயத் தலைவர்களின் கூட்டம் 2013 நவம்பர் 15 இலிருந்து 17 வரை நடை பெறுவதனை குறிக்குமுகமாக 500 ரூபா இனத்திலான நாண யத் தாளொன்றை இலங்கை மத் திய வங்கி வெளியிடவுள்ளது. இது மத்திய வங்கியினால் வெளியிடப் படுகின்ற 3-வது ஞாபகார்த்த நாண யத்தாளாகும்.

ஞாபகார்த்த நாணயத் தாளின் அளவு, நிறம் மற்றும் பாதுகாப்புப் பண்புகள் என்பன தற்பொழுது சுற் றோட்டத்திலுள்ள ரூ.500 தாளி லுள்ள அதே பண்புகளையே கொண் டிருக்குமெனினும் சில மாற்றங்கள மாத்திரம் காணப்படும்.

இதில் 5 மில்லியன் தாள்கள் வெளியிடப்படவுள்ளன.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,954.36 | 5,855.34 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3280.33 | 3232.50 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,538.187 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** கலமசு(1270.00), இன்டஸ்ரியல் அஸ்ப்(231.30), மடுல்சிம(13.00), லங்கா வென்ஜர்ஸ்(36.40), செலிங்கோ இன்சூரன்ஸ்(1400.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எஸ்எம்பி லீசிங்(X)(0.30), செரண்டிப் இன்ஜி (141.00), லங்கா சென்சரி(W)(0.50), சிலோன் லெதர்(W)(1.80), போகல காபைற்(18.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.46 | 132.72 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 207.71 | 214.27 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 172.50 | 178.73 |
| சுவிஸ் பிராங் | 140.25 | 145.79 |
| கனேடிய டொலர் | 123.18 | 127.75 |
| அவுஸ்திரேலிய டொலர் | 121.50 | 126.43 |
| சிங்கப்பூர் டொலர் | 103.56 | 107.25 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.69 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# வலி. தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பன்னிரண்டு மயானங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட 12 இந்து, கிறிஸ்தவ மயானங்களை அபிவிருத்தி செய்வதற்கென 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இப்பன்னிரண்டு மயானங்களுக்கும் சராசரியாக ஒன்றரை இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் அந்தந்த மயானங்களின் அபிவிருத்தி சபைகளுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு வேலைத்திட்டங்களை நிறைவு செய்வதென சபையின் மாதாந்த பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனடிப்படையில் குறித்த அபிவிருத்தி வேலைகள் யாவும் சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

பெரும்பாலான மயான அபிவிருத்திச் சபைகள் வேலையினைப் பூர்த்தி செய்து கொடுப்பனவை பெற்றுக்கொண்டுள்ளன. பிரதேச சபைக்குட்பட்ட மயானங்கள் அனைத்தும் பிரதேச சபை தவிசாளரின் வழிகாட்டுதலிலும் மேற்பார்வையின் கீழும் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களின் நிதிப்பங்களிப்பின் மூலம் மிகச்சிறப்பான முறையில் சுற்றுமதில், எரிகொட்டகை மயான வளைவு, வாயிற்கதவுகள். நுழைபாதைகள், கிணறு, மலசலகூடம், இளைப்பாறும் மண்டபம், காவலாளி அறை, நீர் மற்றும் மின்விநியோகம் போன்ற இன்னோரன்ன விடயங்கள் அந்தந்த அபிவிருத்திச் சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன .

பாரிய இச்செயற்றிட்டத்திற்கு பிரதேச சபையும் தனது பங்களிப்பை வருடந்தோறும் வழங்கத் தவறவில்லை. பொதுமக்களினதும் ஊடகங்களினதும் பல்வேறுபட்ட விமர்சனங்களுக்குள்ளாகியிருந்த முக்கியமான பெரும்பாலான மயானங்கள் தற்போது புதுப்பொலிவுடன் காணப்படுகின்றன. தொடர்ச்சியான பராமரிப்புக்கென மயான அபிவிருத்திச் சபையினரால் கட்டண அறவீடும் அமுல்படுத்தப்படுகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது என பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷ் தெரிவித்துள்ளார். (செ-6)

## கலந்துரையாடல்

சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் மற்றும் தனியார் ஆயுர்வேத வைத்தியர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்றை நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்த சுதேச மருத்துவ திணைக்களத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இக் கலந்துரையாடலில் வட மாகாணத்திலுள்ள சகல தனியார் ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் டாக்டர் திருமதி சி.துரைரட்ணம் கேட்டுக் கொண்டுள்ளார்.(அ)

# சூதாட்ட நிலையங்களை முற்றுகையிட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

## ஐ.தே.கட்சி கண்டனம்

கொழும்பிலுள்ள சூதாட்ட நிலையமொன்றை முற்றுகையிட்ட 23 பொலிஸ் அதிகாரிகளை அரசாங்கம் உடனடியாக இடமாற்றம் செய்திருப்பதை ஐக்கிய தேசியக் கட்சி வன்மையாகக் கண்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தலைமைத்துவ சபையின் தலைவர் கருஜயசூரிய எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு.

ஆசியாவில் ஆச்சரியம் மிக்க நாடாக இலங்கையை உருவாக்க அரசுக்குள்ள ஒரே வழி கசினோ சூதாட்ட நிலையங்களை அமைப்பது தான். இவ்வாறான சூதாட்ட நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் எந்த பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தண்டிக்க அரசாங்கம் தயக்கம் காட்டப்போவதில்லை.

நாட்டில் நீதியை நிலை நாட்டும் நடவடிக்கைகளில் அரசாங்கம் விசித்திரமான கொள்கைகளைப் பின்பற்றுகின்றது. சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு மற்றும் ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களை நியமிக்க வழிவகுக்கும் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஒழித்து விட்டு 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்றியதன் மூலம் பொலிஸ் உட்பட சகல அரச சேவைகளையும் அரசாங்கம் அரசியல்மயப்படுத்தி விட்டதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

# மிரிஹான பிரதேசத்தில் பாரிய ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மிரிஹான பிரதேசத்தில் வீடொன்றிலிருந்து பாரியளவில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. பிரதேசத்தில் டெங்கு நுளம்புகள் பரவுவதனை தடுக்கும் நோக்கில் நடைபெற்ற தேடுதல்களின் போதே இந்த ஆயுதத் தொகுதி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

16 துப்பாக்கிகள், 56 கைத்துப்பாக்கிகள், 240 வாள்கள் மற்றும் 60 கத்திகள் உள்ளிட்ட ஆயுதங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. இந்த வீட்டிலிருந்து மேலும் பத்து பைனாகுளோர்களும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் வீட்டின் உரிமையாளரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (செ-2)


## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### காணிகட்டடம் மற்றும் பாரவூர்திகள் விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்

எமது சங்கத்துக்கு சொந்தமான மின்தறி ஆலைக் கட்டடத்துக்கு மேற்குப்பக்க பட்டினசபை வீதிக்கும் தெற்குப்பக்க ஒழுங்கையிலுமுள்ள நிலப்பரப்பு 05 விஸ்தீரணமுடைய் காணி கட்டடத்துக்கும் மற்றும் வென்ஸ் 24/2533, லேடன்ட் NPJG- 0031 இலக்க பாரவூர்திகளுக்குமான மூடிய கூறுவிலை கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

நிபந்தனைகள்

1.மேற்படி ஆதனம் மற்றும் பாரவூர்திகளைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தமது கூறுவிலைகளைச் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல் செய்து 25.11.2013 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பாக பொதுமுகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

2.கேள்விகளை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

3.கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

4.மேற்படி ஆதனம் மற்றும் வாகனங்களைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் வேலை நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை பொது முகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
சங்கானை ப.நோ.கூ.சங்கம்.
(சி/5434) 0212250126








## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா : 50 செவ் 1இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / Store Keeper<br>தொ.இ: B/2470 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா : 58 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L, IT<br>தொ.இ: G/2578 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா : 12.75 உயரம்: 169cm<br>தகைமை/தொழில்: BA (Hons) / Accounts Senior (UK)<br>தொ.இ: B/2471 | பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா : 7.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA, MA / மேலதிக மாவட்ட பதிவாளர்<br>தொ.இ: G/2583 |
| பிறப்பு: 1982 இந்து (Ku)<br>நட்சத்திரம்: கேட்டை செவ் 12<br>ல்கி.பா : 13.75 உயரம்: 167cm<br>தகைமை/தொழில்: A/L, AAT / பிரதம காசாளர்<br>தொ.இ: B/2473 | பிறப்பு: 1977 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 2<br>கி.பா : 70 சூரி, செவ் 1இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA / முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ: G/2584 |
| பிறப்பு: 1981 இந்து (Vis)<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா : 36.5 சூரி, செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி / ஆசிரியர்<br>தொ.இ: B/2474 | பிறப்பு: 1986 இந்து (V+Sa)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2586 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# பழந்தமிழர் ஆய்வு மாநாடு


(யாழ்ப்பாணம்)

பழந்தமிழர் இயக்கத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப் படும் பழந்தமிழர் ஆய்வு மாநாடு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


பழந்தமிழர் இயக்கத்தின் நிறுவுநரும் மன்னார் மாவட்ட செயலக புள்ளிவிபரவிய லாளருமான ம.வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் பிரதம விருந் தினராக யாழ்.பல்கலைக்கழக புவியியல் பேராசிரியர் கா.குகபாலன் கலந்து கொள்ள வுள்ளார்.

கௌரவ விருந்தினராக தொழில திபர் கல்விக் காருண்ணியன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் கலந்து கொள்ளவுள்ளார்.

இம் மாநாட்டில் பழந்தமிழர் வாழ்வில் ஆட் சியும் அறமும்,' பழந்தமிழர் பண்பாடும் ஆரியர் வருகையும், இலங்கைத் தமிழர் பண்பாட்டு மரபுரிமைகளின் செறிவும், மறக்கப்பட்ட தொன் மங்களும் தொல்லியல் மூலாதாரங்களை அடிப் படையாகக் கொண்ட ஆய்வு ஆகிய தலைப் புக்களில் முறையே யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் க.சிவானந்த மூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் பேராசிரியர் ஏ.என். கிரு ஷ்ணவேணி, யாழ்.பல்கலைக்கழக வர லாற்று தொல்லியல்துறை பேராசிரியா செ. கிருஸ்ணராஜா ஆகியோர் ஆய்வுகளை வழங்கவுள்ளனர். (செ-5)




# சண்டில் குளத்தை புனரமைக்குக!



(கரணவாய்)

கரவெட்டி மத்தணி தெற்குப் பகுதியி லுள்ள சண்டில் குளத்தையும் சண்டில் குள வீதியையும் புனரமைத்துத் தருமாறு பிர தேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

மேற்படி குளத்தின் அணைக்கட்டு சேத மடைந்து வீதியின் மட்டத்தோடு காணப் படுகின்றது.

இதனால் மழை காலங்களில் போக்குவரத்துச்செய்வது மிகவும் ஆபத்தாகவுள்ளதென மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் அப்பிரதேச மக்கள் கோடை காலங்களில் இக் குளத்தின் நீரை குளிப்பதற்கு பயன் படுத்தி வருவதால் இக் குளத்தின் பக்கமாக மின்வயர் பாதுகாப்பற்ற, ஆபத்தான முறையில் காணப்படுவதால் மின்கம்பத்தை குளத்தின் மறுபக்கத்தில் மாற்றியமைக்குமாறும் குளத்தை ஆழமாக்குமாறும் அருகிலுள்ள வீதியை புனரமைத்துத் தருமாறும் கரவெட்டி மத்தணிப் பிரதேச மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (அ-9-60)

# யாழ்.றக்கா வீதியினை புனரமைக்க கோரிக்கை



யாழ்.சென் பொஸ்கோ வித்தியாலயம் அமைந்துள்ள றக்கா வீதியினை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ள மையினால் இவ் வீதியால் பயணிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த வீதி நீண்ட காலம் புனரமைக்கப்படாது காணப்படுவதனால் வீதி முழுவதும் குழிகள் நிறைந்த காணப்படுகின்றது.

இவ் வீதியில் ஆரம்ப பாடசாலையொன்றும் காணப்படுவதனால் தினமும் இவ் வீதியால் வாகனப் போக்குவரத்து அதிகமாகவே காணப் படுகிறது.

வீதி சீரின்மையால் பாடசாலைச் சிறார்கள் உட்பட அனைவரும் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர் எனவும் தெரி விக்கப்படுகி ன்றது.

குறித்த வீதியினைச் சூழவுள்ள அனைத்து வீதிகளும் காப்பற் இடப்பட்டு செப்பனிடப்பட் டுள்ள போதிலும் ஏன் இவ் வீதி மட்டும் கவனிப் பாரற்ற நிலையில் காணப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ் வீதிக்கு அருகில் இந்திய துணைத் தூதரகம் காணப்படுகின்றது எனவும் அம் மக்கள் தெரிவிக்கின்றனர். நீண்டகாலமாக இவ் வீதி புனரமைக்கப்படாமல் இருப்பது ஏதும் உள்நோக்கம் கொண்டதா? எனவும் கேட்கப்படுகின்றது. (செ-4)

# அதிகரித்து செல்லும் வட்டி அறவீடு; சாவகச்சேரி வர்த்தகர்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன் றத்தினால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் கடன் கொடுப்பனவுகளின் வட்டி அறவீடு தொடர்பில் வர்த்தகர்கள் மத்தியில் விசனம் உருவாகியுள்ளது.

மேற்படி சங்கத்தில் சுமார் 400 பேருக்கு மேற்பட்ட வர்த்தகர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர்.

அதில் சிலர் தமது பெருந்தொகை பணத்தை இச் சங்கத்தில் வைப்பிலிட்டும் வருகின்றனர். இதனால் வங்கிகள் மூலமாக கடனுதவி வழங்கப்படாது சங்க சேமிப்பு நிதிமூலம் கடன் வழங்க கூடியதாக இருக்கின்றது. இவ்வாய்ப் பினால் 60 அங்கத்தவர்களுக்கு மேல் இது வரை கடன் பெற்றுள்ளனர்.

26 வீதப்படி வட்டியுடன் இவ்வருடம் கடன் தொகையை பெற்றவர்கள் தமது வட்டிப் பணத்தை தொடர்ந்து செலுத்தி வந்துள்ளனர்.

இடையில் சுமார் 6 மாதங்களின் பின்னர் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் 38வீதம் வட்டிப்படி கடன் தொகைக்கு அறவிடப் படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திடீர் அதிகரிப்பினால் அதிர்ச்சி அடைந்த கடன் பெற்றவர்கள் தமது வியாபார பின்ன டைவு மற்றும் பொருளாதார பிறழ்வு குறித்து கவலையடைய நேரிட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் பாதிப்புக்குள் ளான வர்த்தகர் ஒருவர் கூறுகையில்,

இவ்வட்டி வீதத்தை எவ்வளவு மதிப்பிடு கிறார்கள் என எங்களால் அறிய முடியவில்லை. ஒவ்வொரு மாதமும் மாறுபட்ட வட்டி வீதத்திலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அதிக ளவான வட்டியை அறவிட்டு வருகின்றனர்.

இது பற்றி தென்மராட்சி பிரதேச செயல ருக்கு பதிவுத் தபால் மூலம் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தோம். ஆனால் எமது பிரச்சினை க்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை.

யாழ்.குடா நாட்டில் மீற்றர் வட்டியில் கடன் எடுத்த வர்த்தகர்கள் பலர் தங்கள் வியாபார நிறுவனங்களை பூட்டிவிட்டு ஊரை விட்டே ஓடி ஒளிக்கின்றனர்.

அதுபோல் நாங்களும் வியாபார நிலை யத்தை மூடாமல் இருப்பதற்கு எங்கள் கடனை இலகுவாகச் செலுத்துவதற்குரிய ஏற்பாட்டினை யும் மனிதாபிமான வட்டி அறவீட்டையும் உரி யவர்கள் ஏற்படுத்தி தரவேண்டும் என தெரி வித்துள்ளார். (செ-1)




# வர்த்தக நிலையமொன்றினுள் திருடர்கள் கைவரிசை

(கரணவாய்)


கரணவாய் குஞ்சர் கடை சந்தியிலுள்ள வர்த்தக நிலையமொன்றினுள் பணம், பொருட் கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு சனிக் கிழமை இடம்பெற்றுள்ளது.

மேற்படி வர்த்தக நிலையத்தின் பாதுகாப்புக் காக போடப்பட்டிருந்த இரு கதவுகளையும் உடை த்து உள்நுழைந்த திருடர்கள் மீள் நிரப்பு அட்டை கள், சிகரட் பெட்டிகள், துவிச்சக்கரவண்டி உதிரிப் பாகங்கள், பணம் என்பனவை உட்பட வேறு சில பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் நெல்லி யடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9-60)





"அன்புப் பிள்ளைகள்" சிறுவர் பாடல் நூல் இறுவெட்டு வெளியீடு அண்மையில் யா/புற்றளை மகா வித்தியால யத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இறுவெட்டைப் பாடிய செல்வி ஆதித்தியா கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தும்பளைச் செய்தியாளர்)

# சனல்-4 காணொளியை நான் பார்த்தேன்!

## கடுமையாக விவாதிப்பேன் என்கிறார் கமரூன்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுக்கள் குறித்து கடுமையான கேள்விகளை தொடுக்கவுள்ளதாக பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் டுவிட்டரில் நேற்று தெரிவித்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சியின் சில்லிடும் ஆவணப்படமான போர் தவிர்ப்பு வலயம் காணொளியை தான் பார்த்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

போர் தவிர்ப்பு வலயம் ஆவணத திரைப்படத்தை நான் பார்த்தேன் இது குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கடுமையான கேள்விகளை தொடுப்பேன் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

பிரித்தானிய தமிழர் பேரவை உட்பட பிரித்தானிய தமிழ் சமூக பிரதிநிதிகள் கடந்த வாரம் இலக்கம் 10 மவுனிங் வீதியில் பிரதமர் கமரூனை சந்தித்தனர்.

கொழும்பில் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதென பிரித்தானியா எடுத்துள்ள தீர்மானத்தை அவர்கள் சவாலுக்கு உட்படுத்தி னர்.

கனேடிய அரசாங்கத்தின் முடிவை பின்பற்றி இங்கிலாந்து அரசும் பிரதமர் கமரூனும் இந்த மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என பிரித்தானிய தமிழ்சமூகமும, வெளி யில் இருக்கும் தமிழ் சமூகமும் தொடர்ந்தும் கோரிவரும் நிலையில் பிரதமர் இந்த சந்திப்புக்காக அழைப்பை விடுத்திருந்தார்.

இங்கு பேசிய பிரதமர் கமரூன், பிரித்தானியா மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள், போர் க்குற்றங்கள், மனிதாபிமானத்திற்கு எதிரானகுற்றங்கள் மற்றும் தமிழர்களுக்கு எதிரான இனப்படு கொலை குறித்து சர்வதேச சமூகம் கண்ணை திருப்ப தயாரில்லை என்ற செய்தியை வழங்க முடியும் என்றார்.

கடுமையான போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக கூறப்படும் இலங்கை ஜனாதிபதி அடுத்த இரண்டு வருடஙகளுக்கு பொது நலவாயத்தின் தலைவராக வருவதற்கு பிரித்தானிய பிரதமர் இடமளிக்கக் கூடாது என தமிழ் சமூகம் கோரிக்கை விடுத்தது.

இதற்கு பதிலளித்த பிரதமர், இலங்கை ஜனாதிபதி பொதுநலவாயத்தின் தலைவராவதை தடுப்பதற்கு தற்போது காலதாமதமாகி விட்டதாகவும் அதனை தற் பொழுது தடுக்க முடியாது என்றும் கூறியுள்ளார். (செ-2)

# முஸ்லிம்களின் அடையாளத்தை அரசியல்வாதிகள் அழிக்கின்றனர்

## ஹஸனலி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்நாட்டு முஸ்லிம்களின் இன அடையாளத்தை இல்லாதொழிப்பதற்காக இனவாத அரசியல் வாதிகள் செயற்பட்டு வருகின்றார்கள். அதற்கான வேலைத் திட்டங்களும் பொத்துவில் மண்ணிலேயே இடம் பெற்று வருகின்றது என பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளருமான எம்.ரி. ஹஸனலி தெரிவித்துள்ளார்.

பொத்துவில் பகுதியில் இடம் பெற்ற கட்டட திறப்பு விழாவொன்றில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைப்பதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கை கொடுத்தது. அப்போது நாம் அரசுடன் சில ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டோம்.

ஆனால் அரசாங்கம் வாக்களித்தபடி எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. எங்களை அரசாங்கம் தொடர்ந்தும் ஏமாற்றி வருகிறது.

அதேவேளை பொத்துவில் பிரதேசத்தை ஆக்கிரமித்து பெரும்பான்மையாக வாழும் முஸ்லிம்களை சிறுபான்மையினர்களாக மாற்றுவதே அரசின் நோக்கமாகவுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸை பலவீனப்படுத்தவே அரசு சதித்திட்டம் தீட்டுகிறது இவற்றை முறியடிக்கும் முயற்சியில் முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டு வருகிறது. எனவே பொத்துவில் பிரதேச முஸ்லிம்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் எங்களது கட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும். இல்லையேல் வடமாகா ணத்துடன் இணைந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும் எனவும் கூறினார். (செ-2)

# உண்மை நிலையை சனல்-4 நேரில் வந்து பார்க்க வேண்டும்

## அழைப்பை விடுக்கிறார் கெஹலிய

(கொழும்பு)

இநதியா மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை பின்பற்ற வேண்டும் அல்லது ஒரே மாதிரியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற எந்தவித அவசியமோ சம்பிரதாயமோ கிடையாது என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கையின் உண்மையான நிலைமையை பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளர் கெல்லம் மக்ரே நேரடியாக வருகைதருவதன் மூலம் பார்க்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சியின் பணிப்பாளருக்கு இந்தியா விசா வழங்க மறுத்துள்ள அதேவேளை, இலங்கை அவருக்கு விசா வழங்குவது தொடர்பாக ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வருகிறார். அவருடன் வரும் ஊடகவியல்ாளர கள் குழுவிலேயே கெல்லம் மக்ரேவும் வரவுள்ளதாகத் தெரிய வருகிறது.

எனவே, அவர் இங்கு வந்து, இலங்கையின் உண்மை நிலை என்ன என்பதை பார்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய உண்மையான நிலைமையை பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி அறிவதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் அவருக்கு கிட்டியுள்ளது.

எனவே அவரது விஜயத்தின் பின்னர் இலங்கை மீது எவ் வாறான சவால்கள் விடுக்கப்பட்டாலும் அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராகவேயுள்ளது. (செ-2)

# வெளிநாட்டில் வேலை; 160 பேரிடம் நிதிமோசடி

## மூவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக வீடொன்றில் நடத்தப்பட்டு வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிலையம் சுற்றி வளைக்கப்பட்டு மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாத்துவ பொலிஸ் பிரிவின் அரலிய உயன, மாலேகம பிரதேசத்தில் இந்த நிலையம் நடத்தப்பட்டு வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாத்துவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போதே, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் கைதாகியுள்ளனர்.

இவர்கள் தந்தை, மகன் மற்றும் மருமகள் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாக கூறி 25 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை பணம் பெற்று வந்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்களால் இவ்வாறு 160 பேரிடம் இருந்து சுமார் 80 இலட்சம் வரை மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் 33 முறைப்பாடுகள் பொலிஸாரிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு, வாத்துவ பொலிஸார் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-2)



இலங்கையின் முதலாவது கணனி உற்பத்தி தொழிற்சாலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டை சூரியவேவ பிரதேசத்தில் திறந்து வைத்து தொழிற்சாலையை பார்வையிட்ட போது...

# ஆமை இறைச்சி; பெண் கைது

(யாழ்ப்பாணம்)

ஆமை இறைச்சி விற்பனையில் ஈடுபட்டிருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்ணொருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

யாழ்.குருநகர் சின்னக் கடை மீன் சந்தையில் வைத்தே குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்தோடு குறித்த பெண்ணிடமிருந்து சுமார் 8 கிலோ ஆமை இறைச்சியினை பொலிஸார் பறிமுதல் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

சட்டவிரோதமாக ஆமை இறைச்சியை விற்பனை செய்தகுற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பெண் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

# சூழலை மாசாக்கும் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாது

## 3,000 வாகனங்களுக்கு தடை

(கொழும்பு)

சுற்றுப் புறச் சூழலுக்கு தீங்கை விளைவிக்க கூடிய வகையில் அதிகளவான புகையை வெளியிட்ட 3 ஆயிரம் வாகனங்களை கறுப்பு பட்டியலில் இடுவது தொடர்பில் மோட்டார் வாகன போக்குவரத்து அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ் வருடத்தின் இதுவரையான காலத்தினுள் மேற்கொண்ட தேடுதலின் போது இவ் வாகனங்கள் தொடர்பில் கண்டறியப்படுள்ளது.

குறித்த வாகனங்கள் போக்குவரத்துக்கு உகந்த நிலையில் இல்லாமையின் காரணமாக கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களிலும் நாடு முழுவதிலும் வாகனங்களை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (செ-2)

# சட்ட விரோத மின்சாரம்; கரவெட்டியில் இருவர் கைது

(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்தில் சட்ட விரோத மின்சாரம் பெற்ற இருவர் நெல்லியடிப் பொலிஸா ரிடம் வசமாக மாட்டியுள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை திடீர் சோதனையில் ஈடுபட்ட நெல்லியடிப் பொலிஸார் வீட்டில் சட்ட விரோதமுறையில்மின் இணைப்பை ஏற்படுத்தி மின்சாரம் பெற்ற இருவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் பொலிஸார் நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

வழக்கை விசாரித்த நீதவான் இரு நபர்களையும் தற்போது பொலிஸ் பிணையில் செல்லுமாறும் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். (செ-9-60)




# இராஜாங்க விருந்து!

ஒருநாள் அரண்மனையில் பெரிய விருந்து நடந்தது. ராஜகுருவும் தெனாலிராமனும் ருசித்து ரசித்து உண்டு மகிழ்ந்தார்கள்.


விருந்துக்குப்பின் இருவரும் ஒரு மண்டபத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ராஜகுரு இதுபோன்ற விருந்து உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்ல சுகம் அளிக்கிறது என்றார்.

இதைக் கேட்ட தெனாலிராமன் அவரை சீண்டிப்பார்க்க தீர்மானித்தார். உண்பதைவிட, உண்டவை சரியாக இல்லாவிட்டால் பெரும் சிரமம் அகிவிடும் என்றார் தெனாலிராமன்.

ராஜகுருவோ சற்றுமுறைப்பாக ராஜாங்க விருந்தைப் பழிக்காதே ராமா! இதுபோன்ற விருந்தை உண்பதே ஒரு தனி சுகம் என்றார்.

தெனாலிராமனோ இவருக்கு ஒருநாளைக்கு பாடம் புகட்ட வேண்டும் என்று எண்ணி அங்கிருந்து சென்றுவிட்டார்.

ராஜகுரு ஒருநாள் ஒரு தனியறையில் இருந்த சமயம் பார்த்து வெளியே பூட்டிவிட்டார் தெனாலி ராமன் உள்ளே



யிருந்த குருவுக்கு அன்றைக்கென்று வயிறு குழப்பியது, அவர் பெரிதும் சிரமப்பட்டார். கதவு வெளியே பூட்டப்பட்டிருந்ததால் அவர் பல முறை தட்டினார். பலனில்லை. அவசரத்தில் தவியாய் தவித்துக்கொண்டிருந்தார்.

அவரை நான்றாக தவிக்க விட்டு கொஞ்சநேரம் கழித்து தெனாலிராமன் கதவைத் திறந்தான். அவர் வேகவேகமாக வெளியே வந்து கழிவறையைநோக்கி ஓடினார்.

சிறிது நேரம் கழித்து வெளியே வந்த ராஜகுரு தெனாலிராமனைப் பார்த்து மூச்சு வாங்கிப் போசினார். அப்பாடா! ராமா நீ அன்றைக்குச் சொன்னதை ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால், இது போன்ற விபரீத விளையாட்டை இனிமேல் செய்யாதே என்றார்.

தெனாலிராமன் தான் சொன்னதை செய்து காட்டிவிட்டதை நினைத்து இருவரும் அடக்க முடியாமல் சிரித்தனர்.

◎◎◎◎◎◎◎◎◎◎◎◎◎◎◎

# தங்க மஞ்சள் குருவி!



விஜயநகர் விழா கோலம் பூண்டிருந்தது. அரச உற்சவம். அதில் கலந்துகொள்ள அண்டைநாட்டு அரசன் விஜயவர்தனர் வந்தார். விழா முடிந்த பிறகும் சில தினங்கள் விஜயநகரில் தங்கினார்.

ஒருநாள் அரசர் அவரிடம் அரசே நான் கேள்விப்பட்டேனே... தங்கள் அவைப் புலவர் தெனாலிராமன் மிகவும் சாதுரியசாலியாமே. அவரிடம் சொல்லி எனக்கு காலையில் தங்கமஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலுமாக உருமாறும் அற்புதக் குருவி ஒன்றைக் கொண்டு வந்து தரச் சொல்லுங்களேன்... என்றார்.

மேலும் அதுசில சமயம் மூன்று காலாலும், சில சமயம் இரட்டைக் காலாலும், பிறகு ஏழு இறக்கை கொண்டு வானில் பறக்கவும் வேண்டும் என்றார்.

அரசன் உடனே தெனாலியை அழைத்து விரைவில் அத்தகைய குருவியைக் கொண்டு வா... என்று உத்தரவிட்டார்.

அதைக் கேட்டு தெனாலிராமனுக்கு தலையே சுற்றியது. அத்தகைய பறவை பற்றி அவர் ஒருபோதும் கேள்விப்பட்டதுகூட இல்லை.

ஆனால், சிரித்தவாறே சரி... அரசே! நாளைக்கு நான் அத்தகைய பறவையோடு வருகிறேன் என்றார்.

மறுநாள் தெனாலி சபைக்குத் தாமதமாக வந்தார். அவர் நிலைமை மிக மோசமாக இருந்தது. கிழிந்த உடைகள், அதில் புற்களும் முட்களும் மண்ணும் ஒட்டியிருந்தன. கையில் குருவி எதுவும் இல்லாத ஒரு பறவைக்கூடு.

அவர் அரசரிடம், என்ன சொல்வேன் அரசே! அதிசயமான கதை நடந்துவிட்டது. அந்தக் குருவி கையில் கிடைத்துவிட்டது. நானும் அதைக் கூண்டில் அடைத்துவிட்டேன். அதை இங்கு எடுத்துவரும் போது, அது தனது மாயமான ஏழு இறக் கைகளை விரித்துப் பறந்து சென்றுவிட்டது. காட்டில் அதைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்றுவிட்டேன். அது மீண்டும் என் கையில் சிக்கவில்லை என்றார்.

தொடர்ந்து சற்றுதூரத்தில் பறந்து சொன்றவாறே அது என்னிடம் சொல்லிற்று. அரசரிடம் போய்ச் சொல்.... காலையாகிற போதோ, அல்லது இரவாகிறபோதோ, அல்லது நடுப்பகல் ஆகிற போதோ, வெளிச்சமோ இருட்டோ இல்லாதபோது நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து திரும்ப வந்து விடுகிறேன்... என்றது என்றார்.

அதைக் கேட்டதும் அரசருக்கு மட்டுமல்ல, அண்டைநாட்டு மன்னர் விஜயவர்தனருக்கும் தலை சுற்றியது.

அப்படிப்பட்ட சமயம் எங்கு உண்டாகும்? காலை ஆகாமல், நடுப்பகல் ஆகாமல், இரவு ஆகாமல், வெளிச்சம், இருட்டு ஆகும் சமயம் எது? என்று அனைவரும் வியப்பு அடைந்தனர்.

அதைக் கேட்டு விஜயவர்தனர், அரசர் இருவரும் சிரித்து விட்டனர்.

விஜயவர்தனர் சொன்னார்: தெனாலியின் சாதுரியம் பற்றி இதற்கு முன்பு கேள்விப்பட்டுள்ளேனே தவிர, இப்போதுதான அதை நேரில் பார்த்தேன்... என்று புகழ்ந்தார்.

◎◎◎◎◎◎◎◎◎◎◎◎◎◎◎




- 1500- பிரான்சின் பன்னிரண்டாம் லூயி மன்னனுக்கும் அராகனின் இரண்டாம் பேர்டினண்ட் மன்னனுக்கும் இடையில் நேபில்ஸ் பேரரசைத் தமக்கிடையே பிரிக்க உடன்பாடு எட்டப்பட்டது.
- 1673-உக்ரேனின் கோட்டின் என்ற இடத்தில் போலந்து- லித்துவேனியாப் படைகள் ஓட்டோமான் இராணுவத்தைத் தோற்கடித்தன.
- 1675-குருகோவிந்த் சிங் சீக்கியர்களின் 10ஆவது குருவானார்.
- 1675-லெய்ப்னிட்ஸ் Gottfried Leibniz என்பவர் y=f (x) என்ற செயலி ஒன்றின் வரைபின் பரப்பைக் காணுவதற்கு முதன்முறையாக தொகையீட்டு நுண்கணிதத்தைப் பாவித்தார்.
- 1831-அடிமைப் புரட்சியில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட நாட் டர்னர் வேர்ஜீனியாவில் தூக்கிலிடப்பட்டான்.
- 1865-டீஸ்ட்டா ஆற்றின் கிழக்குப் பகுதிகளை பூட்டான் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்குக் கொடுத்தது.
- 1800- ஆஸ்திரேலியாவின் Bushranger நெட் கெல்லி மெல்பேர்னில் தூக்கிலிடப்பட்டான்.
- 1887-ஐக்கிய அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தொழிலாளர் தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- 1889-வாஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1909-ஹவாயில் பேர்ள் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது.
- 1918-பிரான்சில் கொம்பியேன் காடு என்ற இடத்தில் தொடருந்துப் பெட்டி ஒன்றில் ஜேர்மனிக்கும் கூட்டுப்படைகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. முதலாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது.
- 1918-ஜோசப் பித்சூத்ஸ்கி வார்சாவுக்குத் திரும்பி போலந்தின் உயர் இராணுவப் பதவியைப் பெற்றான். போலந்து விடுதலை பெற்றது.
- 1919-இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
- 1930-அல்பேர்ட் ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் தமது கண்டுபிடிப்பான ஐன்ஸ்டைன் குளிர்சாதனப்பெட்டிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.
- 1933-யாழ்.பொதுநூல் நிலையம் அமைக்கப்பட்டது.
- 1942- இரண்டாம் உலகப்போர்: நாசி ஜேர்மனி பிரான்ஸ் மீதான தனது முற்றுகையை முடித்தது.
- 1960-தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோ டின் டியெம் மீதான இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1965-ரொடீசியாவில் இயன் ஸ்மித் தலைமையிலான வெள்ளை இன சிறுபான்மை அரசு விடுதலையை அறிவித்தது.
- 1966-நாசா ஜெமினி 12 கப்பலை விண்ணுக்கு அனுப்பியது.
- 1968-மாலைதீவுகளில் இரண்டாவது குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1975-ஆஸ்திரேலியப் பிரதமர் கஃப் விட்லம் தலைமையிலான அரசை அதன் ஆளுநர் கலைத்தார்.
- 1992-பிரித்தானியத் திருச்சபை பெண்களையும் சமய குருக்களாக சேர்ப்பதற்கு முடிவெடுத்தது.
- 2004-யசீர் அரபாத் நோபல் பரிசாளர் இறந்துவிட்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது. மஹ்மூத் அப்பாஸ் தலைவரானார்.

### பிறப்புக்கள்

- 1898-கி.ஆ.பெ. விசுவநாதம், தமிழறிஞர் (இ.1994)
- 1821-பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ.1881)
- 1937-ப.ஆப்டீன், ஈழத்து எழுத்தாளர்
- 1945-டானியல் ஒர்ட்டேகா, நிக்கராகுவின் குடியரசுத் தலைவர்

### இறப்புக்கள்

- 2004-யாசிர் அரபாத், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர், நோபல் பரிசாளர் (பி.1929)
- 2005-பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர் (பி.1909)

### சிறப்பு நாள்

பொதுநலவாய நாடுகள்-நினைவுறுத்தும் தினம்

### ப.ஆப்டீன்

ப.ஆப்டீன் என்ற பஹார்டீன் ஆப்டீன், ஈழத்துத் தமிழ் கலை இலக்கிய துறையில் பங்காற்றி வரும் மலையக முஸ்லிம படைப்பாளிகள் வரிசையில் கவனத்துக்குரிய ஒரு படைப்பாளி ஆவார்.

1962 ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்த தமிழின்பம் எனும் சிற்றிதழில் வந்த உரிமையா? உனக்கா? எனும் முதல் சிறுகதை மூலம் இலக்கிய உலகில் புகுந்தார். 1960 களில் வேலை காரணமாக நாவலப்பிட்டியில் பணியாற்றிய எழுத்தாளர் நந்தி அவர்களின் ஊக்குவிப்பாலும் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் தொடர்பாலும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து செயற்பட்டு வருகிறார். சிறுகதை, குறுநாவல், நாவல் எனப் பன்முக வடிங்களின் மூலம் தனது படைப்பிலக்கிய பங்களிப்பினை கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக ஈழத்து இலக்கிய வழியாக பணியாற்றி வரும் இவரது பல படைப்புக்கள் ஆங்கிலம், சிங்களம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

# பணம் துன்பத்தை வரவழைக்கிறதா?



ஆன்மீகம் 34

**கேள்வி:-** பணம் வந்தால் துன்பமும் சேர்ந்து வருமா?

சத்குரு:- பணம் உங்களுக்கு துன்பத்தை வரவழைப்பதில்லை. முட்டாள்தனம்தான் உங்களுக்குத் துன்பத்தை வரவழைக்கிறது. பணம் உங்கள் வாழ்க்கையில் நுழையும் போது முட்டாள்த்தனமும் உங்கள் வாழ்க்கையில் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். அந்த நிலையில் துன்பமும் சேர்ந்து வரலாம். அதற்காக பணம் வந்துவிட்டாலே துன்பமும் வந்தாக வேண்டும் என்று கிடையாது. பணம் உங்களுக்கு நிச்சயம் வசதியைக்கொண்டு வருகிறது.

ஆனால், வசதிகள் ஏன் துன்பமாக மாற வேண்டும்? நாம்தானே வசதியை தேடினோம்? அப்படியிருக்க, நாம் விரும்பியதே நமது துன்பத்திற்கு ஏன் காரணமாக வேண்டும்? ஏதோ ஒன்று நமது கையில் இருக்கும்போது அதனுடன் சேர்ந்து மற்றொன்றை முழுவதுமாக மறந்து விடுகிறோம். மனிதர்களின் பெரிய பிரச்சினை இது. காலையில் சாப்பிட உட்கார்கிறீர்கள். ஊறுகாய் மிகவும் சுவையாக இருக்கிறது. இப்போது மற்றவற்றை `மறந்துவிடுகிறீர்கள். ஊறுகாய், ஊறுகாய், ஊறுகாய் மட்டுமே வயிறு நிரம்ப சாப்பிடுகிறீர்கள். மாலையே பிரச்சினை ஆரம்பித்துவிடுகிறது. அடுத்த நாள் காலைவரை கூட அது காத்திருக்காது.

அதே போலத்தான் செல்வமும் செழுமையும். அவை உங்கள் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் வரும்போது மிகவும் அழகாக இருக்கும். உங்களிடம் போதுமான பணம் இருந்தால் அடுத்த நாள்வேலை செய்வதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நீங்கள் விரும்பினால் கண்ணை மூடிக்கொண்டு தியானத்தில் உட்கார்ந்துவிடலாம். இன்று சம்பாதித்தால்தான் நாளை உணவு என்ற நிலையிருப்பவர். விரும்பினாலும் அப்படி தியானத்தில் உட்கார முடியாது.



எனவே, பணம் உங்களுக்கு துன்பத்தை வரவழைப்பதில்லை. முட்டாள்தனம்தான் உங்களுக்கு துன்பத்தை வரவழைக்கிறது.

கோவிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகத்தைவிட ஹோட்டலிலிருந்து வெளிவரும் மனிதர்களின் முகம் அதிகப் பிரகாசமாக இருக்கிறது. என் சிறு வயதில் இது என்னை மிகவும் குழப்பியிருக்கிறது. அது மிகவும் வெட்கக் கேடானது இல்லையா? ஏராளமானோர் தினமும் கோவில், மசூதி, மாதா கோவிலுக்குச் செல்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து திரும்பிவரும்போது அவர்கள் முகத்தைக் கவனித்திருக்கிறீர்களா? அவர்கள் முகம் மகிழ்ச்சியாக மாறியிருக்கிறதா? நான் 11 வயதாக இருக்கும்போது இது என்னை மிகவும் குழப்பியிருக்கிறது. அந்த வயதில் நான் ஒருபெரிய கோவில் வாசலில் நிறைய நேரம் உட்கார்ந்து கொண்டு கோவிலிருந்து திரும்பி வருபவர்களைப் பார்த்துக்கொண்டேயிருப்பேன்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# பொதுநலவாய மாநாட்டில் போர்க்குற்றப் பங்காளிகள்



இலங்கையின் மனித உரிமை மீறல்களை உள்ளடக்கிய போர்க்குற்றங்களில் தாங்களும் பங்காளிகளாக இருப்பதால் அங்கு நடைபெறும் மாநாட்டை எவ்வாறு புறக்கணிக்க முடியும் என சோனியாவும் ராகுல். காந்தியும் நினைப்பதில் நியாயமில்லாமலில்லை.

இந்த வாரம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடுதான், இப்போதைய சூடான சமாசாரம்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இதில் பங்குபற்றவாரா என்பது பற்றி வரும் செய்திகள் இரண்டு வகையாக உள்ளன. பங்குபற்றுவார் என்று காலையில் ஒரு செய்தி சொன்னால், பங்குபற்றமாட்டார் என மாலையில் வரும் இன்னொரு செய்தி கூறும்.

ஜெனிவா மாநாட்டில் இலங்கை மீதான அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்குமா இல்லையா என்ற நிலைப்பாடு, அதன் வாக்களிப்பு நடைபெறும்வரை தெரியாதிருந்தது.

கிட்டத்தட்ட அதுபோன்ற நிலைமைதான் இங்கும்.

புதுடில்லியின் வெளிவிவகாரத்துறை உயர் அதிகாரிகள் எப்படியாவது மன்மோகன் சிங்கை கொழும்புக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதில் முனைப்பாக உள்ளனர். சிலவேளை இதனைப் படிக்கும் போது முடிவு தெரிய வந்திருக்கலாம்.

மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்குபற்றினாலென்ன, பங்குபற்றாவிட்டாலென்ன இந்த விடயத்தில் இந்தியா கற்றுக்கொண்ட பாடங்களும், பெற்றுக்கொண்ட அனுபவங்களும் வித்தியாசமானவை.

இதற்கான அடிப்படைக் காரணம், முள்ளிவாய்க்காலில் முடிவுற்ற போரின் பங்காளிகளாக இந்தியாவும் இருந்ததுவே.

இந்தப் போரை இந்தியாவுக்காகவே நாங்கள் மேற்கொண்டோம்"என்று எத்தனையோ தடவைகள் ராஜபக்ச சகோதரர்கள் பகிரங்கமாகக் கூறியும், இந்தியா அதனை மறுக்காததை இங்கு குறிப்பிடுவது முக்கியமானது.

ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்குத் தள்ளப்பட்ட இந்தியப் பிரதமர் மாநாட்டைப் பகிஷ்பரிப்பதென்பது இலகுவானதல்ல.

தமிழக மக்களும், அங்குள்ள அரசியல் சக்திகளும், தமிழக அரசும் தங்களாலான அனைத்தையும் செய்து முடித்துவிட்டன. மாநில அரசு முதன்முறையாக அனைத்துக் கட்சிகளையும் இணைத்து ஒருமனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

பிரதமர் செல்லக்கூடாது என்று அந்தத் தீர்மான்ம் சொல்லவில்லை. இந்தியா முழுமையாக இதனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றே இந்தத் தீர்மானம் கூறியது.

இது நிறைவேற்றப்பட்டதையடுத்து புதுடில்லியிலிருந்து வந்த செய்திகள் தமிழக மக்களின் உணர்வுகளைப் பதம் பார்ப்பவை.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தாம் மாநாட்டில் பங்குபற்றப் போவதாக ஊடகங்களுக்கு அறிவித்தது முதலாவது.

மன்மோகன் சிங் மாநாட்டுக்குச் செல்வதற்கு அவரது காங்கிரஸ் கட்சியின் உயர் பீடம் அனுமதி அளித்துவிட்டதாக அடுத்த தகவல் வந்தது.

மன்மோகன் சிங் கலந்துகொள்வதையே சோனியாவும் அவரது மகன் ராகுல் காந்தியும் விரும்புவதாக அறிவித்தலொன்று பின்னால் வந்தது.

எல்லாவற்றையும் சேர்த்து மொத்தமாக, இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பான வெளிவிவகார அதிகாரிகள் மன்மோகன் சிங்கை மாநாட்டுக்கு அனுப்புவதில் தீவிரமாக இருப்பதாகக் கடைசிச் செய்தி வந்தது.

அவருக்கு கொழும்பில் ஹோட்டல் அறை தயாராக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து ஏற்பாடுகள், பாதுகாப்பு ஒழுங்குகள், முன்னும் பின்னும் செல்லும் அதிகாரிகள் பட்டியல் எல்லாம் தயார்.

ஆனால், இன்னமும் முடிவு எதுவும் எடுக்கப்பட வில்லை என்று பிரதமர் அலுவலகம் கூறுகின்றது.

அதற்கேற்றாற்போல மன்மோகன் சிங் மௌனம் காத்து வருகின்றார்.

இந்திய நேரப்படி நவம்பர் 8ஆம் திகதி காலை வரை இந்த மௌனம் கலையவில்லை ஆயினும், எந்த வேளையிலும் கலையலாம் என சகல ஊடகங்களும் எதிர்பார்க்கின்றன.

இந்திய காங்கிரசின் உயர்பீடம் மன்மோகன் சிங் மாநாட்டில் பங்குபற்ற அனுமதி அளித்ததாகச் சொல்லப்படுவது ஏகமனதான முடிவல்ல.

ஆரம்பத்திலிருந்தே இதனை எதிர்த்து வருபவர் அமைச்சர் ஜி.கே.வாசன். கட்சித் தலைவர் சோனியாவுடனும் பிரதமர் மன்மோகன் சிங்குடனும் நேரடியாக இவர் தர்க்கம் புரிந்துள்ளார்.

அமைச்சர்கள்ப.சிதம்பரம், ஏ.கே.அந்தோனி, வி.நாராயணசாமி, ஜெயந்தி நடராஜன் ஆகியோர் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் தங்கள் விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவர்களின் ஆட்சேபனைகள், அடுத்த வருட பொதுத்தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டவை என்றே சோனியாவும் ராகுலும் பார்ப்பதால், அதனையிட்டு அவர்கள் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.

தமிழ்நாட்டின் எதிர்ப்பையும்கூட இவர்கள் உதாசீனம் செய்வது தெரிகின்றது.


'இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றுதான் தமிழ்நாடு. ஒரு மாநிலத்துக்காக அயல்நாடடைப் புறக்கணிப்பதா? இப்படியே போனால் இனி ஒவ்வொரு மாநில அரசுக்கும் தலையாட்ட நேரிடும்' என்பது வெளிவிவகார அதிகாரிகளின் கருத்து.

மனித உரிமை மீறல்களில் சிக்குப்பட்டு, விடுபட முடியாது நிற்கும் ஒரு நாட்டில் நடைபெறும் மாநாட்டில் பங்குபற்றுவதால், அந்நாட்டின் செயற்பாடுகளுக்கு அங்கீகாரம் கொடுப்பதாக அமையலாம் என்பது பலரதும் கேள்வி.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை உள்ளடக்கிய போர்க்குற்றங்களில் நாங்களும் பங்காளிகளாக இருப்பதால் அங்கு நடைபெறும் மாநாட்டை எவ்வாறு புறக்கணிக்க முடியும்?" என சோனியாவும் ராகுல் காந்தியும் நினைப்பதில் நியாயமில்லாமலில்லை.

-பனங்காட்டான்- (தொடரும்)

# நாடு பிளவடையும் என கூறியவர்கள் வாயடைத்து போயுள்ளனர்-வாசு



(கொழும்பு)

**வடமாகாண சபையின் தேர்தலை நடத்த வேண்டாம். நாடு பிளவுபட்டுப் போய்விடுமென்று கருத்துக்களை முன்வைத்தவர்கள் இன்று வாயடைத்துப் போயுள்ளார்கள். வடமாகாணத்தில் ஜனாதிபதி சமாதானத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்தியுள்ளார் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயற்பாடுகளை அம்பாறை மாவட்டத்தில் அமுல்படுத்துவது தொடர்பில் நேற்று முன்தினம் காரைதீவு விபுலானந்தா மணி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல மொழிகளையும், மதங்களையும் பேசுகின்ற நாடுகள் இனறு மக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றன. நாம் பாரிய யுத்தத்தினை எதிர் கொணடு, அதனை முடிவுக்கு கொண்டு வந்த தன் பின்னர் மக்களிடையே ஒருமைப்பாட்டையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்திக் கொண்டு வருகின்றோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டிலுள்ள சகல இனங்களுக்கும் அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

வட மாகாண சபைக்கு ஜனநாயகமானதொரு தேர்தல் நடைபெற்றுள்ளது. ஆனால், இந்தத் தேர்தலை நடத்த வேண்டாமென்று ஜனாதிபதியிடம் பலரும் கேட்டுக் கொண்டார்கள்.

வடக்கு மாகாணத்திற்கு தேர்தல் நடைபெற்றால் அங்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி பெறும். அவர்கள் நாட்டைப் பிளவுபடுத்தி விடுவார்கள் என்றும் தெரிவித்தார்கள். இவர்களின் எந்தக் கதைக்கும் ஜனாதிபதி அடிபணியவில்லை. வட மாகாண சபைக்கு தேர்தலை நடத்தி அங்குள்ள மக்களுக்கு அரசியல் அதிகாரத்தினை அவர் வழங்கியுள்ளார். ஆனால், இன்று வட மாகாண சபைக்கு தேர்தல் நடத்த வேண்டாமென்று சொன்னவர்கள் வாயடைத்துப் போயுள்ளார்கள்.

ஜனாதிபதி வடக்கில் சமாதானத்தையும், சக வாழ்வையும் ஏற்படுத்தியுள்ளார். அங்கு மக்களின் ஆட்சியை உருவாக்கியுள்ளார். ஜனநாயகம் என்பது மக்களின் ஆட்சி முறைமையாகும். ஜனநாயகம் என்பது மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதாகும்.

ஜனநாயகம் என்பது ஒருவரை ஒருவர் மதித்து கௌரவமளிப்பதாகும். ஜனநாயகம் என்பது சிறுபான்மை மக்களுக்குரிய மதிப்பைக் கொடுப்பதாகும். அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் அவர்களிடையே ஏற்றத்தாழ்வை பார்க்கக் கூடாது.

இந்த நாட்டிலே வாழுகின்ற சிங்கள மக்களுக்கு பாரிய பொறுப்புக்கள் இருக்கின்றன. அவர்கள் ஏனைய மக்களுடன் சமத்துவமாக வாழ வேண்டும். அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். ஏனைய மக்களும் சிங்கள மக்களுடன் ஒற்றுமையுடன் வாழ வேணடும்.

நாம் சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டிய கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம். இன்று ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து கொண்டு வருகின்றன.

ஆனால், அவர்களின் வல்லமை இன்னும் வீழ்ச்சியடையவில்லை. அதனால், அவர்களுடன் இணைந்து செல்ல வேண்டியுள்ளது. நாம் அவர்களுக்கு அடிமைப்பட்டுவிடாமல் கொடுக்கல் வாங்கலகளைச் செய்ய வேண்டியுள்ளன.

நாடுகள் தமது மக்களிடையே ஒருமைப்பாடுகளை அடைந்து கொள்வதற்கு போராடிக் கொண்டிருக்கின்றன. நாம் நம்மிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

எம்மிடையே காணப்படும் ஊனமுற்றவர்களுக்கு சக்தி வழங்க வேண்டும். அவர்களை மற்றவர்களும் மதிக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டும் என்றார். (செ-2)

## இரண்டு வாரத்திற்கு ஒருமுறை

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படுகிறது ஹெரோயின்

(சென்னை)

இந்தியாவில் இருந்து இரண்டு வாரத்திற்கு ஒருமுறை 60 இலட்சம பெறுமதியான ஹெரோயினை நபரொருவர் இலங்கைக்கு அனுப்பி வைப்பதாக இலங்கை பொலஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் வியாபாரம் தொடர்பில் இந்திய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையை சேர்ந்த போதைப்பொருள் வியாபாரி ஒருவர் சுமார் 60 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை இலங்கைக்கு அனுப்பி வைக்கும் இரகசியமான கடத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்ததாக இலங்கை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு இந்தியாவில் இருந்து அனுப்பி வைக்கப்படும் போதைப் பொருளை நாட்டில் விநியோகித்து வந்த பெண்ணொருவர் உட்பட இரண்டு பேரை அண்மையில் கைது செய்துள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் சிறையில் இருக்கும் இந்த சந்தேகநபர் சர்வதேச தொலைபேசி தொடர்புகள் மூலம் சர்வதேச போதைப்பொருள் விற்பனையாளர்களுடன் தொடர்பு கொண்டு இலங்கைக்கு ஹெரோயினை அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

குறித்த சந்தேக நபரின் இலங்கையிலுள்ள நெருங்கிய உறவினர்கள், கொழும்பு மற்றும் அதன் அயல் பிரதேசங்களில் நீச்சல் தடாகங்களுடன் கூடிய சொகுசு ஆடம்பர வீடுகளை கொள்வனவு செய்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(செ-2)

# பொதுவேட்பாளரை நியமிக்க கவனமெடுக்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை மீளவும் நிறுத்துவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றியீட்டக் கூடிய சிறந்த வேட்பாளர் ஒருவரை நியமிக்கத் தீர்மானித்துள்ளதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் நலனுக்காக அதிகாரங்களை விட்டுக் கொடுக்க கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தயாராக இருக்கின்றார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தலைமைத்துவ பேரவைக்கு மேலும் அதிகாரங்களை வழங்க ரணில் விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். கட்சியின் வெற்றிக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-2)

# சபுகஸ்கந்த மூடப்பட்டதனால் தினமும் 6 கோடி ரூபா நட்டம்

## எரிபொருள் விலை அதிகரிக்கலாம்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதனால் நாள்தோறும் ஆறு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக பெற்றோலிய வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை ஈடு செய்துகொள்ள எரிபொருட்களின் விலைகளை அரசாங்கம் உயர்த்தக் கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எண்ணெய் சுத்திகரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் நாள் ஒன்றுக்கு ஆறு கோடியே நாற்பது இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதாக குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

எண்ணெய் சுத்திகரிப்பு மேற்கொள்ளப்படாத காரணத்தினால், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகின்றது.

மசகு எண்ணெய் இறக்குமதி செய்து பின்னர் சுத்திகரிப்பதன் மூலம் ஏற்படும் செலவுகளை விடவும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதியினால் அதிக செலவுகள் ஏற்படுகின்றன.

அதிக செலவுகளை ஈடு செய்து கொள்ள எரிபொருட்களின் விலைகளை அரசாங்கம் உயர்த்தக் கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (செ-2)

# மாநாடு நடைபெறும் போது போராட்டங்களை நடத்துவோம்

## தடையுத்தரவுகளுக்கு அஞ்சோம்- ஐ.தே.க.

கொழும்பில் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டின் போது போராட்டங்களை நடத்தக் கூடாது என பொலிசார் உத்தரவிட்டுள்ளனர். பொலிஸாரின் உத்தரவுகளை ஏற்றுக்கொள்ளவோ, பொருட்படுத்தவோ போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

மாநாடு நடைபெறும் காலத்தில் எந்தவிதமான போராட்டங்களையும் நடத்தக் கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் உத்தரவுகளை கவனத்திற் கொள்ளாது குறித்த காலப்பகுதியில் போராட்டம் நடத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அதிகாரிகளின் ஊடாக சில உத்தரவுகளை பிறப்பிக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த உத்தரவுகளை பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தனது அதிகாரத்தை மீறி அறிக்கை வெளியிட்டு வருகின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 14ஆம் திகதி எதிர்க்கட்சிகள் பாரியளவில் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் பதவிக் காலம் முடிவடைய உள்ளதுடன் புதிய செயற்குழுவை கட்சியின் தலைமைத்துச் சபையே நியமிக்கும் என அந்த கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கட்சியின் தற்போதைய செயற்குழுவை ஐக்கிய தேசியக்கட்சியின் புத்திஜீவிகள் குழு நியமித்துள்ளது.

செயற்குழுவிற்கான உறுப்பினர்கள் எப்படி நியமிக்கப்படுகின்றனர் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பின் பிரகாரம், செயற்குழு உறுப்பினர்களாக 22 பேரை நியமிக்க முடியும்.

அந்த 22 பேரையும் கட்சியின் தலைவரான ரணில் விக்ரமசிங்க நியமிப்பதில்லை என்றார். (செ-2)

# புங்குடுதீவு போக்குவரத்து தடைப்பட்டு போகுமா?

புங்குடுதீவு வேலணை பாலத்தினூடாக பயணிக்கும்போது வாகனங்கள் அடிக்கடி பாழாகின்றன. இதனால் நாம் எடுக்கும் வருமானங்கள் மறுநாளே வாகனத் திருத்தத்துக்கு கொடுக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. இதற்கு வீதியில் காணப்படும் குன்றும் குழியுமே காரணமாகிறது. இதுகுறித்து உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பஸ் சாரதி



ஒடுங்கி வரும் வீதி

இலங்கையில் உள்ள நகரங்கள் அபிவிருத்தி அடைந்து வருகின்றன. இதற்காக மத்திய அரசும் மாகாண அமைச்சுக்களும் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்கின்றன.

அதன்பின் அந்த நிதியின் மூலம் கட்டி முடிக்கப்பட்டவற்றை ஜனாதிபதி, அமைச்சர்கள் என பெருமளவான வி.ஐ.பிக்கள் ஒன்றிணைந்து திறந்து வைப்பார்கள்.

இந்தநிலை நாட்டின் பல பாகங்களில் அடிக்கடி இடம்பெறுகின்றன. இதனை ஊடகங்கள் வாயிலாக மக்கள் கண்டு கொள்வார்கள்.

இவ்வாறாக இடம்பெறும் அபிவிருத்திகள் ஏன் கிராமமட்டங்களை எட்டவில்லை என்பது புரியாத புதிராகவே காணப்படுகின்றது. அந்த வகையில் வேலணையையும் புங்குடுதீவையும் இணைக்கும், இலங்கையிலேயே மிகப்பெரிய பாலம் என்ற பெருமைகளைக் கொண்ட புங்குடுதீவு- வேலணை பாலம் இன்னமும் எவர் கண்ணிலும் பட்டுவிடவில்லை என்பதுதான் மிகப்பெரிய வேதனை.

புங்குடுதீவு- வேலணை பாலம் என்பது சுமார் 4 கிலோமீற்றர் நீளத்தைக் கொண்டது. இப்பாலத்தினூடாகத்தான் புங்குடுதீவு, நெடுந்தீவு மற்றும் நயினாதீவு மக்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்று தமக்குத் தேவையான பொருட்களை பெற்றுக்கொள்கின்றனர். புங்குடுதீவில் இருந்து சுமார் 30 கிலோமீற்றர் தூரத்திலுள்ள யாழ்ப்பாணத்துக்கு செல்வதற்கு இதனூடாகவே செல்லமுடியும்.

யுத்த சூழ்நிலை ஓய்ந்தபின்னர் தென்பகுதி சுற்றுலாப் பயணிகளின் படையெடுப்பு நயினாதீவு மற்றும் நெடுந்தீவை நோக்கி மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் வருமானம் ஈட்டக்கூடிய வழிமுறைகளை அங்குள்ள மக்கள் கண்டறிந்து தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வேலணை பிரதேச சபையினர் தமக்கான வருமானங்களை வரிமூலம் பெற்றுக்கொள்கின்றனர். இந்த நிலையில் சுற்றுலாப் பயணிகளை ஒருமுறைக்கு மேல் நயினாதீவு,நெடுந்தீவுப் பகுதிகளுக்கு செல்லவிடாது சினம் கொள்ள வைத்துள்ளது வேலணைத்துறையிலிருந்து புங்குடுதீவு பழைய துறை வரையான 4 கிலோமீற்றர் நீளம் கொண்ட புங்குடுதீவு - வேலணைப்பாலம்.

இப்பாலத்தினூடாக தினமும் சுமார் 200

## வேலணை-புங்குடுதீவுப் பாலத்தை திருத்த முன்வராதது எதற்கு?

இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள், கனரக வாகனங்கள் என பயணிக்கின்றன.

அத்துடன் தனியார் பேருந்து சங்கத்தின் சுமார் 20 பேருந்துகள் தினமும் சுமார் 6 தடவைகளும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துக ளும் இப்பாலத்தினூடாக பயணிகள் சேவையை மேற்கொள்கின்றன.

இவ்வாறாக வாகனங்களில் பயணிப் போர் புங்குடுதீவு- வேலணைப் பாலத்தில் பேருந்துகள் நகரும்போது ஒருவகை பயப்பீதியில் உறைந்து போய்விடுகின்றனர். அதேவேளை ஏனையோர் படும் கஷ்டங்களை பார்த்து பயம் கலந்த சிரிப்புடன் இருப்பவர்களும் அதில் இருக்கத்தான் செய்கின்றனர். சீரற்ற வீதியே இப்பிரயாண பயத்துக்கு காரணமாகின்றது.

இப்பாலமானது அது கட்டப்பட்ட காலத்திலிருந்து முழுமையான திருத்தங்கள் எவையும் செய்யப்படவில்லை. குன்றும் குழியுமாக காணப்படும் இவ்வீதியை சில தடவைகள் தார்களை இட்டு பிரயோசனம் இல்லா சிறு சிறு புனரமைப்பு வேலைகளை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊழியர்கள் மேற்கொள்வதையும் மக்கள் கண்டுகொள்ளாமலும் இல்லை.

இவர்கள் மேற்கொள்ளும் இவ்வாறான வேலைகளால் பேருந்துகளில் பயணிப்போர் பரதநாட்டியம் ஆடுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன.

பேருந்து மிதமான வேகத்தில் சென்றாலும் ஆசனங்களில் இருப்பவர்கள் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டிருப்பது சாரதி, நடத்துநர் உட்பட அனைவரும் அறிந்த விடயமே. அதனைவிட இப்பாலவீதியின் இருமருங்கும் சேதமடைந்து வீதி சுருங்கிக்கொண்டிருக்கின்ற நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இதனால் இதனூடாக பயணிக்கும் வாகனங்கள் கடலுக்குள் பாயும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இரண்டு வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்வதற்கோ அல்லது கடந்து செல்வதற்கோ முடியாத அளவு சிறிதாகக் காணப்படும் இவ்வீதியின் இருமருங்கும் சேதமடைந்து வருவதானது இப்பாலவீதியூடான போக்குவரத்தை நிறுத்தும் நிலைக்கு தள்ளப்படும்என்பதில் சந்தேகம் இல்லை.

யாழ்.நகரப்பகுதியில் பெருந்தெருக்கள் முதல் குச்சொழுங்கைகள் வரை அனைத்துமே காப்பெற் வீதியாக மாற்றமடைகின்றன. ஆனால் வருமானம் தரக்கூடிய, சுற்றுலாப் பயணிகளை கவரக் கூடிய இப் பாலத்தை எவரும் கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன் எனப்புரியவில்லை.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், வெளிநாட்டுப் பிரபலங்கள், தென்பகுதி மக்கள் என எண்ணற்றவர்கள் இதனூடாக பயணித்து பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியிருப்பர். ஒருமுறை வந்தாலே மீண்டும் வர நினைக்க முடியாத அளவுக்கு நோயுள்ளவர்களாக மாற்றியனுப்பும் இவ்வீதியூடாகவே தினமும் அரச உத்தியோகத்தர்கள் நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு பகுதிகளுக்கும் சென்று தமது கடமைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

வேலணை பிரதேச செயலர், யாழ்.அரச அதிபர், வேலணை பிரதேச சபைத் தவிசாளர் போன்றவர்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபை உயர் அதிகாரிகளும் இவ்வீதியூடாக பல தடவைகள் சென்றுள்ளனர். இவர்கள்கூட இது குறித்து கவனம் எடுக்கவில்லையே என்று மக்கள் கவலை கொள்கின்றனர்.

தினமும் தமது உடலை வருத்திப் பயணிக்கும் புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு மக்கள் சுகமான போக்குவரத்தை மேற்கொள்ள பண்ணையிலிருந்து குறிகாட்டுவான் வரையான வீதியை புனரமைக்க உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முதற்கட்டமாக பழுதடைந்துவரும் புங்குடுதீவு- வேலணைப் பால வீதியை புனரமைக்க முன்வரவேண்டும். இல்லையெனில் வேலணைப் பாலத்தில் பேருந்து பாய்ந்தது என்ற



செய்தியை கேட்க வேண்டிவரும் என்பதுடன் அதற்கான பதிலை உரிய அதிகாரிகள் ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலையும் ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை.

தீபன்

# புனிதர்களால் முடியாதது எம்மாலும் முடியாது!

## கசினோ தொடர்பில் தம்மாலோக்க தேரர்

(கொழும்பு)

புத்த பகவான், இயேசு கிறிஸ்து, முகமது நபி போன்ற புனிதர்களினால் முழு உலகத்தை திருத்த முடியாமல் போனது, அது போல் எம்மாலும் முழுவதையும் திருத்த முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உடுவே தம்மாலோக்க தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கசினோ பற்றி சிந்தித்து நாம் குழப்பமடைய தேவையில்லை. முழு உலகத்தையும் எம்மால் திருத்த முடியாது.

முழு உலகத்தையும் பாவத்தில் இருந்து மீட்க, புத்தர், இயேசு, முகமது போன்றவர்களால் முடியாது போனது. இதனை எந்த வகையிலும் செய்ய முடியாது. அப்படியானால் நாம் ஏன் இப்படியானவற்றை நினைத்து கவலைப்பட வேண்டும்.

பௌத்த மத துறவியான உடுவே தம்மாலோக்க தேரர் சூதாட்டத்திற்கு ஆதரவான கருத்து வெளியிட்டுள்ளமை குறித்து பல்வேறு தரப்பினர் தமது எதிர்ப்புகளை வெளியிட்டு வருகின்றனர்.

தம்மாலோக்க தேரர் எவருடையே ஒப்பந்தத்தையோ நிறைவேற்றும் நோக்கில் இவ்வாறு பேசி வருவதாக பௌத்த அமைப்புகளின் தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தம்மாலோக்க தேரர்,சூதாட்டத்தை ஆதரிப்பதற்கு பதிலாக கொழும்பு மாநகர சபையில் மலசலகூடம் ஒன்றை குத்தகைக்கு எடுத்து அதனை நிர்வகிக்கலாம் என தம்பர அமில தேரர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

(செ-2)

# மக்கள் பிரச்சினைகள் குறித்து வெளி.பிரதிநிதிகளிடம் விளக்குவோம்

## சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பொதுநலவாய மாநாட்டுக்கு வருகைதரும் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளின் வெளிவிவகார பிரதிநிதிகள், அமைச்சர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் மேற்கொள்ளும் காணி அபகரிப்பு, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் அவசியம், காணாமல் போனோர் குறித்த அரசாங்கத்தின் அசமந்தப் போக்கு, எதுவித விசாரணைகளுமின்றி பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளாமை, போர்க் குற்றங்கள் குறித்த சர்வதேச விசாரணைக்கான தேவை போன்ற விடயங்கள் குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற்கண்ட நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களிடம் விளக்கமளிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை கூட்டமைப்பு எதிர்வரும் 14 , 15 ஆம் திகதிகளில் தனித்தனியாக சந்திப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(செ-2)

# கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பது இலங்கைத் தமிழர்களுக்கு உதவும்

## -தென்னாபிரிக்க பேராயர் டெஸ்மன்ட் ருற்று-



இலங்கையில் இம்மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டை இந்த அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் சிலர் புறக்கணித்திருப்பதானது, இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு எதிராக அந்நாட்டு அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்பதற்கு அழுத்தத்தை ஏற்படுத்துவதற்கு உதவும் என தென்னாபிரிக்க சமாதானப் பரப்புரைச் செயற்பாட்டாளரும் நோபிள் பரிசைப்பெற்ற பேராயருமான டெஸ்மன்ட் ருற்று தெரிவித்துள்ளார்.

முப்பதாண்டுகளாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது இலங்கை அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பளிக்கப்பட வேண்டும் என, 2009 இல் விடுதலைப்புலிகளைத் தோற்கடித்த இலங்கை அரசாங்கத்தின் மீது அனைத்துலக சமூகம் அழுத்தம் கொடுப்பது தற்போது அதிகரித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தன்னால் இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் இதய சுத்தியுடன் பொறுப்பளிக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான போதியளவு காரணங்கள் உள்ளதால் அனைத்துலக சமூகம் இதற்கு எதிராக தன்னால் முடிந்தளவு அனைத்துப் பொறிமுறைகளையும் கையாள வேண்டியுள்ளது.

பொதுநலவாய உச்சி மாநாட்டை அரசாங்கத் தலைவர்கள் புறக்கணிப்பதானது இந்தப் பொறிமுறைகளில் ஒன்றாக இருக்க முடியும் என புதுடில்லிக்கான தனது பயணத்தின் போது ஊடகவியலாளர்களிடம் ருற்று இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

நவம்பர் 15 தொடக்கம் 17 வரையான நாட்களில் இலங்கையில் இடம்பெறவுள்ள உச்சிமாநாட்டை, தான் புறக்கணிப்பதாக ஏற்கனவே கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் கார்பர் அறிவித்துள்ளார். இதே வேளையில் இந்த உச்சி மாநாட்டைப் புறக்கணிப்பது தொடர்பில் தமிழ் மக்கள் எதனை உணர்கின்றனர் என்பதை அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும் என டெஸ்மன்ட் ருற்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்கள் கலந்துகொள்ளக் கூடாது என நான் கூறுகிறேன்.

இது தொடர்பில் இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் எத்தகைய கருத்தைக் கொண்டுள்ளனர் என்பது அறியப்பட வேண்டும் என ருற்று தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவை ஆண்ட சிறுபான்மை வெள்ளையினத்தவர்களுக்கு எதிராக குரல் கொடுத்ததற்காகவும் தென்னாபிரிக்கா நிறவெறி ஆட்சிக்கு உட்பட்டிருந்த போது பொருளாதாரப் புறக்கணிப்புக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்ததற்காக 1984 இல் தற்போது 82 வயதான பேராயர் ருற்றுவுக்கு நோபல் அமைதிப்பரிசு வழங்கப்பட்டது.

மனிதாபிமான விவகாரங்களை விவாதிப்பதற்காக முக்கியமான முன்னாள் உலகத் தலைவர்களை ஒன்றாக்கி நெல்சன் மண்டேலாவால் உருவாக்கப்பட்ட த எல்டர்ஸ் என்கின்ற அமைப்பின் தலைவராக தற்போது ருற்று செயற்படுகிறார்.

பிரித்தானியா மற்றும் இதன் முன்னைய காலனித்துவ நாடுகளை உள்ளடக்கி 53 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட்டைப் புறக்கணிக்குமாறு அல்லது அரசாங்கத் தலைவர்களுக்குப் பதிலாக குறைந்த மட்டப் பிரதிநிதிகளை அங்கு அனுப்பி இந்த மாநாட்டிற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்குமாறும் மனித உரிமைக் கண்காணிப்பகம், அனைத்துலக மன்னிப்புச்சபை போன்ற அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில் தொடர்ந்தும் ஊடகவியலாளர்கள், அரசியல் தலைவர்கள், சிறுபான்மையினர் போன்றோர் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதுடன் இவர்கள் காணாமற்போதல், படுகொலை செய்யப்படுதல் போன்றனவும் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் இலங்கை அரசாங்கமானது தனக்கெதிராகச் செயற்படுபவர்களை அச்சுறுத்துவதாகவும் இந்த நிலை மேலும் மேலும் மோசமடைவதால் பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாட்டுத் தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சிமாநாட்டைத் தான் புறக்கணிப்பதாக கடந்த மாதம் கனேடிய பிரதமர் கார்பர் அறிவித்திருந்தார்.

பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமறூன் இந்த உச்சிமாநாட்டில் பங்குபற்றவுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் அந்நாட்டில் இடம்பெறும் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக கேள்வியெழுப்பவுள்ளதாக பிரித்தானியப் பிரதமர் உறுதி தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அயல் நாடான இந்தியாவிலும் எதிர்ப்புக்களும் அழுத்தங்களும் அதிகரித்துள்ளன. இலங்கையில் நடைபெறும் உச்சிமாநாட்டைப் பிரதமர் மன்மோகன் சிங் புறக்கணிக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பில் இந்திய அரசாங்கம் இன்னமும் இறுதித் தீர்மானத்தை எடுக்கவில்லை.

கனேடியப் பிரதமர் இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை என அறிவித்துள்ளதை தாம் வரவேற்பதாக இலங்கையின் பிரதான தமிழ் அரசியற் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுநலவாய அமைப்பின் அடிப்படை விழுமியங்களை இலங்கை மீறியுள்ளது. இந்த உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளக் கூடாது என பல தரப்பினரும் அழுத்தம் கொடுப்பதை நாம் வரவேற்கிறோம். இது தொடர்பில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடரப்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 40,000த்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டதாக 2011 இல் ஐ.நா. வல்லுநர் குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

போரில் பங்குகொண்ட இலங்கைப் படைகள் மற்றும் தமிழ்ப் புலிகள் ஆகிய இரு தரப்பினரும் யுத்த மீறல்களைப் புரிந்துள்ளதாகவும், ஆனால், இலங்கை இராணுவமே இதில் பெருமளவான மீறல்களுக்குப் பொறுப்பாக உள்ளதாகவும் ஐ.நா வல்லுனர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு அனைத்துலக பொறிமுறை ஒன்று உருவாக்கப்படுவதற்கு அனுமதி தரவேண்டும் என ஐ.நா. மனித உரிமைப் பேரவை இலங்கை மீது அழுத்தம் கொடுத்துள்ளது.

ஆனால், இலங்கை அரசாங்கம் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து நிராகரித்து வருவதுடன் தனது இராணுவத்தினரிடம் விசாரணையை மேற்கொள்வதற்கான சுயாதீன ஆணைக் குழு ஒன்றை உருவாக்குவதற்கான அனுமதியையும் நிராகரித்து வருகிறது.

இலங்கையில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்தும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருவதாகவும் அனைத்துலக மனிதஉரிமை அமைப்புக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

-நித்தியபாரதி-

# பொதுநலவாயக் கொள்கைகளை இலங்கை பின்பற்ற வேண்டும்

## பிரிட்டன் உயர்ஸ்தானிகர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் கொள்கைகளை பின்பற்ற வேண்டுமென இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான் கீன் தெரிவித்துள்ளார்.

பொதுநாலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளை மேம்படுத்தவும் உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் மீது கொண்டுள்ள மரியாதை நிமித்தம் தாம் இலங்கை அமர்வுகளில் பங்கேற்பதாக பிரதமர் கமரூன் குறிப்பிட்டுள்ளதாக, ஜோன் ரான்கீன் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதே பிரித்தானியாவின் நோக்கமாக அமைந்துள்ளது எனவும் அதற்காக பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை இலங்கைக்கு உணர்த்தும் நோக்கிலும் அமர்வுகளில் பிரித்தானியா பங்கேற்பதாகத் தெரிவித்துள்ளார்.(செ-2)

# பொதுநலவாய மாநாட்டிற்கான ஏற்பாடுகள் தயார் நிலையில்

## அமைச்சர் பசில் தகவல்



பொதுநலவாய மாநாட்டிற்கான சகல தயார்படுத்தல்களையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுநலவாயநாடுகளின்அரசதலைவர்களின் மாநாடு மற்றும் ஏனைய மாநாடுகளுக்குத் தேவை யான சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் தயார்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த மாநாடுகளில் கலந்துகொள்ளும் அரச தலைவர்கள், அமைச்சர்கள், பிரமுகர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அடங்கலாக சகலரும் இலங்கையில் சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளும் அரசாங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டின் அரச தலைவர்களின் மாநாடு இரண்டு நாட்களுக்கு கொழும்பில் நடைபெறும் அதேவேளை, அதற்கு சமாந்தரமாக இன்று முதல் 14 ஆம் திகதி வரை பொதுநலவாய மக்கள் அமைப்பு மாநாடு ஹிக்கடுவையிலும், நேற்று தொடக்கம் 14 ஆம் திகதி வரை இளைஞர் மாநாடு அம்பாந்தோட்டையிலும் நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-2)

# அமர்வுகளில் பங்கேற்காது தீர்வு குறித்து இந்தியா பேசமுடியாது

## இராஜதந்திரி தயான் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் இலங்கை விஜயம் இருதரப்பு உறவுகளின் திருப்பு முனையாக அமையும் என சிரேஷ்ட இராஜதந்திரியும் முன்னாள் பிரானசுக்கான இலங்கைத் தூதுவருமான கலாநிதி தயான் ஜயலதிக்க தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் இந்திய பிரதமர் பங்கேற்காவிடின் அது இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளில் நிச்சயமாக இடைவெளியை ஏற்படுத்தும்.

குறிப்பாக சிங்கள மக்களின் நம்பிக்கையில் பெரு விரிசலை ஏற்படுத்தும்.

மேலும் இந்திய பிரதமர் அமர்வுகளில் பங்கேற் காதுவிடின் தமிழர்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் இந்தியாவின் முனைப்புக்களில் பாதக விளைவுகளே ஏற்படும். வன்னியில் இடம்பெற்ற யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது.

இந்திய- இலங்கை உறவுகளில் விரிசல் ஏற்படுமாயின் அது பிராந்திய வலயத்தையே பாதிக்கும்.

வரலாற்றில் கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் சரியான அதிகாரப் பகிர்வு பொறிமுறைமை ஒன்றை அறிமுகம் செய்ய வேண்டியது அவசியமானது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தரம் 5 பரீட்சையில் விரைவில் மாற்றம்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் பெரும் மாற்றங்களை கொண்டுவரவுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். புலமைப் பரீட்சை பரீட்சை யானது மாணவர்களுக்கு பெரும் சுமையாகிவிட்டது என்பதில் அமைச்சர்கள், அதிகாரி களிடையே கருத்து வேறுபாடிலலை யென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த சர்ச்சைக்குரிய புலமைப் பரிசில் பரீட்சையை உடனடியாக கைவிடவேண்டுமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சையினால் ஒரு சிறு தொகையினர் மட்டுமே நன்மையடைகின்றனர் என்றும் பெருந்தொகையானோர் விரக்தி அடைகின்றனர் எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அனோமா திஸாநாயக்க கூறினார். (செ-2)




நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தில் கதைகூறும் கதைகள் நூலின் ஆசிரியர் லோ. விஜேந்திரனைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நூலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் உட்பட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் சுரேஸ்குமார் நூலாசிரியருக்கு நினைவுப் பரிசை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# மன்மோகன் மனச்சாட்சிப்படி முடிவெடுத்தால் போதும்

## கருணாநிதி இப்படிக் கூறுகிறார்

(சென்னை)

பிரதமருக்கு மனச்சாட்சி உண்டு. அந்த மனச்சாட்சிப் படி பிரதமர் நடந்து கொண்டால் மட்டும் போதுமானது என்று பொதுநலவாய மாநாடு குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கருணாநிதி அளித்துள்ள பதில்கள் வருமாறு,

**கேள்வி:** இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வது பற்றி டில்லியில் அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பிரதமர் இலங்கை செல்வதைப் போன்று முடிவெடுப்பார்கள் என்று சொல்கிறார்களே?

**பதில்:** அமைச்சரவையில் என்ன பேசுகிறார்கள் என்று எனக்குத் தெரியாது.

**கேள்வி:** பிரதமர் கலந்து கொள்வதாக முடிவெடுத்தால் தி.மு.க. மத்திய அரசுக்கு வெளியே இருந்து கொடுத்துக் கொண்டிருக்கின்ற ஆதரவைத் திரும்பப் பெறமுடியுமா?

**பதில்:** நாங்கள் ஏற்கனவே மத்திய அமைச்சரவையிலிருந்து விலகி விட்டோம். வெளியிலிருந்து ஆதரவு என்பதல்ல. இப்போது பிரச்சினை பிரதமருக்கு மனச்சாட்சி உண்டு. அந்த மனச்சாட்சிப்படி பிரதமர் நடந்து கொண்டால் போதும் என்பது தான்.

இந்தியாவின் சார்பில் பிரதமரோ வேறு எவரோ இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்ற என்னுடைய வேண்டுகோளை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறேன் என்று கருணாநிதி தெரிவித்தார். (அ-2)

# ஈழத்தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்குமாறு இலங்கையிடம் டேவிட் கமரூன் வலியுறுத்துவார்

## இமானுவேல் அடிகளார் தெரிவிப்பு

ஈழத்தமிழர்களுக்கு அதிகூடிய அதிகாரங்களை, உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது பிரிட்டனின் வரலாற்றுக் கடமையாகும்.

எனவே, பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் டேவிட் கமரூன் இதை வலியுறுத்துவார் என்பது உறுதி என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் வண. எஸ்.ஜே. இமானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் டேவிட் கமரூன இலங்கையிடம் நேரடியாகவே கேள்வி எழுப்புவார் என்று அரச பிரதிநிதிகள் தம்மிடம் உறுதியளித்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

பொதுநலவாய மாநாடு தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பதைவிட அதில் பங்கேற்று அழுத்தங்களை பிரயோகிப்பது மேல் என்று பிரிட்டன் அரசு அறிவித்துள்ளது. இது ஒரு வகையில் நியாயம் தான்.

அவர்கள் மாநாட்டில் குரலெழுப்புவார்கள் என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். இதற்கான கடப்பாடும் பிரிட்டனுக்கு இருக்கின்றது.

குறிப்பாக ஒரு காலகட்டத்தில் பிரிட்டன் இலங்கையில் ஆட்சி புரிந்தது. பின்னர் அவர்கள் சுதந்திரம் வழங்கிவிட்டு வெளியேறினர்.

எனவே, தமிழ் மக்களுக்குரிய அரசியல் அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய சரித்திரக் கடமை பிரிட்டனுக்கு இன்றும் இருக்கின்றது.

இது விடயத்தில் இந்தியாவை விடவும் பிரிட்டனுக்கே பொறுப்பு அதிகம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேற்குலகைப் பொறுத்தமட்டில் பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டன் மாத்திரமே அங்கம் வகிக்கின்றது.

அமெரிக்கா அந்த அமைப்பில் இல்லை. ஆகவே, தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச மட்டத்திலான போராட்டத்தை இதனூடாக முன்னெடுக்கும் சக்தி பிரிட்டனுக்கு இருக்கின்றது.

அதேவேளை, நாமும் எங்கள் சொந்தங்களுக்காக தொடர்ந்தும் அனைத்து வழிகளிலும் போராடுவோம்.


தற்போதுகூட ஈழத்தமிழ் இளைஞன் பரமேஸ்வரன் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார் என்றார். (2)

# மன்மோகன் சிங் மாநாட்டில் பங்கேற்காவிட்டால் காரணத்தை துணிச்சலுடன் வெளிப்படுத்த வேண்டும்

## இ.க.க.தேசிய செயலர் டி.ராஜா வலியுறுத்து

(டில்லி)

**இலங்கையில் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டை பிரதமர் மன்மோகன் சிங் புறக்கணிக்க முடிவு செய்தால், அதற்கான காரணத்தை துணிச்சலுடன் வெளிப்படுத்த வேண்டும். இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவே இம்மாநாட்டில் பங்கேற்கவில்லையென்பதை தெரிவிக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.**



இது தொடர்பாக அவர் டில்லியில் செய்தியாளர்களிடம் நேற்று கூறுகையில்,

இலங்கையில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்காவிட்டால், "அது இலங்கைக்கு நெருக்குதல் கொடுப்பதறாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை" என்பதை அவர் துணிச்சலுடன் தெளிவுபடுத்த வேண்டும்.

இலங்கை உள்நாட்டுப் போரின் போது சொல்ல முடியாத மனித உரிமை மீறல்களிலும் சர்வதேசப் போர் விதி மீறல்களிலும் இலங்கை இராணுவம் ஈடுபட்டது. அதற்குக் காரணமான இலங்கை அரசுக்கு அங்கீகாரம் வழங்குவது போல, கொழும்பில் எதிர்வரும் 15 முதல் 17ஆம் திகதி வரை இந் நாடுகளின் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. அக் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன சிங் பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள், சமூக அமைப்புகள் குரல் கொடுத்து வருகின்றன.

ஆனால், அதையும் மீறி குறித்த கூட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பங்கேற்பார் என்று வெளியுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில், பொதுநலவாய கூட்டத்தில் பிரதமர் பங்கேற்க மாட்டார் எனத் தகவல்கள் வெளிவருகின்றன. இது வரவேற்கக் கூடிய விடயம் என்றாலும், காலம் கடந்த முடிவாகும்.

இந்த முறை, இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய கூட்டத்தைப் பிரதமர் புறக்கணிக்க முடிவு செய்தால், அதற்கான காரணத்தை துணிச்சலுடன் அவர் வெளிப்படுத்த வேண்டும்.

இலங்கை போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், அந் நாட்டுத் தமிழர்களுக்கு சம வாய்ப்பும், வாழ்வுரிமையும் கிடைப்பதை உறுதிப்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவே இம்மாநாட்டில் தான் பங்கேற்கவில்லை என்பதை மன்மோகன் சிங் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

அதை விடுத்து, கூட்டத்தில் பங்கேற்காததற்கு உள்நாட்டில் நிலவும் அரசியல் நெருக்குதலே காரணம் எனக் குறிப்பிட்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு மன்மோகன் சிங் கடிதம் எழுதினால் அதை தமிழக மக்கள் ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள் என்றார். (2)

## தமிழக வாழ்வுரிமை கட்சியின் ரயில் மறியல் போராட்டம் நாளை

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பதை அடுத்து தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக நாளை செவ்வாய்க் கிழமை புகையிரத மறியல் போராட்டம் ஒன்று நடை பெறவுள்ளதாக இக் கட்சியின் நிறுவுநர் வேல் முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது,

தற்போது இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பில் யாரும் பங்கேற்க கூடாது என்று தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் வற்புறுத்தியும் அதை மத்திய அரசு கண்டுகொள்ளாமல் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி சல்மான் குர்ஷித் கலந்து கொள்வார் என அறிவித்துள்ளது.

இசைப்பிரியாவுக்கு இழைத்த போர் குற்றங்களை தொலைக்காட்சியில் பார்த்த பின்னரும் இம் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவுள்ளது.

எனவே, மத்திய அரசை கண்டித்து தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக தமிழ்நாடு முழுவதும் நாளைய தினம் ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும். சென்னையில் பெண்கள் திரண்டு ஒப்பாரி போராட்டம் நடத்துவார்கள் என அவர் கூறியுள்ளார். (2)

# சவுதியில் வேலையிழந்த தமிழர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்


## பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு

சவுதியில் வேலை இழந்து தவிக்கும் தமிழர்களை மீட்டு அவர்களுக்கு மறு வாழ்வு அளிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ம.க நிறுவு நர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

சவுதி அரேபியாவில் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காக கொண்டு வரப்பட்டநிதாகத் சட்டத்தால் அங்கு பணியாற்றிவந்த இந்தயர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். நிதாகத் சட்டம் கடந்த 2011 ஆம் ஆண்டே கொண்டுவரப்பட்டாலும் அதை செயற்படுத்துவதற்கு கடந்த மார்ச் 27ஆம் திகதி வரை காலக்கெடு அளிக்கப்பட்டிருந்தது.

இந்திய அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க நிதாகத் சட்டத்தை செயற்படுத்துவதற்கான காலக்கெடுவை



சவுதி அரசு 7 மாதங்களுக்கு நீடித்திருந்தது.

புதிய காலக்கெடு கடந்த 3 ஆம் திகதியுடன் முடிந்து விட்ட நிலையில், இது வரை பணி உரிமம் புதுப்பிக்காமலும், புதிய வேலை வாய்ப்புகளைத் தேடிக் கொள்ளாமலும் சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை கடந்த சில நாடகளாக சவுதி அரேபிய அரசு தொடங்கியிருக்கிறது.

இந்நிலையில் சவுதியில் நிலைமை நாளுக்கு நாள் மோசமடையக்கூடும் என்பதால் அங்கு தவிக்கும் தமிழர்களை மீட்டுவரத் தேவையான நடவடிக்கைகளை போர்க்கால வேகத்தில் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். சவுதியிலிருந்து ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கானோர் தமிழகம் திரும்புவதால் ஏற்கனவே நிலவும் வேலை வாய்பின்மையும், வறுமையும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது.

கேரளாவில் இவ்வாறு தாயகம் திரும்பியவர்களுக்கு சலுகைகளுடன் கூடிய கடன்களும், .2 இலட்சம் ரூபா வரை மானியமும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டிலும், சவுதியில் இருந்து திரும்பியோரின் மறுவாழ்வுக்காக இது போன்ற கடன் மற்றும் நிதி உதவித் திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். (2)

# கோடீஸ்வரர் பட்டியலில் இந்தியாவிற்கு ஆறாவது இடம்

(லண்டன்)

உலக அளவில், அதிக கோடீஸ்வரர்கள் வசிக்கும் நாடுகளின் பட்டியலில், பிரான்ஸ், சவுதி அரேபியா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளை பின்னுக்குத் தள்ளி இந்தியா ஆறாவது இடத்தைப் பிடித்துள்ளது.

உலக நாடுகளில் உள்ள கோடீஸ்வரர்களின் பட்டியல் ஆண்டு தோறும் வெளியிடப்படுகிறது.

இந்நிலையில் அதிக அளவிலான கோடீஸ்வரர்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலும் இடம் பெறுகிறது. அந்த பட்டியலில் 515 கோடீஸ்வரர்களுடன் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. ஜேர்மனி, பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகள், முறையே, 148, 135, 108 கோடீஸ்வரர்களுடன் அடுத்தடுத்த இடத்தைப் பிடித்துள்ளன.

இந்த பட்டியலில், 103 கோடீஸ்வரர்களுடன் இந்தியா ஆறாவது இடத்தில் உள்ளது. உலக அளவில் அனைத்து நாடுகளிலுமுள்ள கோடீஸ்வரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மொத்தம், 2ஆயிரத்தில் 170 பேர் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

இந்தியாவின் வர்த்தக தலைநகரான, மும்பையில் மட்டும், 30 கோடீஸ்வரர்கள் வசிப்பதாக அந்த பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க், ஹொங்கொங், மொஸ்கோ மற்றும் லண்டனுக்கு அடுத்தபடியாக, உலக அளவில் அதிக கோடீஸ்வரர்கள் வசிக்கும் நகரின் பட்டியலில் மும்பை ஐந்தாவது இடத்திலுள்ளது. (2)

# தமிழீழம் அமைந்தால்தான் தமிழர்களை காப்பாற்றமுடியும்

## சுட்டுகிறார் செந்தமிழன் சீமான்


இலங்கையில் தனி தமிழீழம் உருவாகுவதற்கு நாம் அனைவரும் போராடவேண்டும் ஈழத்தில் தனி தமிழீழம் அமைந்தால் தான் நம் இன மக்களை நாம் காப்பாற்ற முடியும்.

தனிஈழம் அமைவது தான் ஒரே தீர்வு உலக வரலாற்றில் தமிழன் போல வாழ்ந்தவனும் இல்லை வீழ்நதவனும் இல்லை என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆவேசமாகப் பேசியுள்ளார். முள்ளி வாய்க்கால் நினைவு முற்றத்தின் திறப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எவ்விதமான தொழில்நுட்பங்கள் இல்லாத காலத்தில் ஆற்றில் ஓடுகிற நீரை தடுத்து அதை விவசாய பாசனத்திற்கு பயன்படுத்த நதியின் குறுக்கே



கல்லணையை கட்டி முடித்தான் கரிகாலச்சோழன்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உலக அளவில் போற்றப்படும் தஞ்சையின் வெற்றி சின்னமாக விளங்கிவரும பெரியகோவிலை கட்டி முடித்து உலகத்திற்கு பெருமையைச் சேர்த்தான் ராஜராஜசோழன்.

இவைகள் எல்லாம் தமிழனின் வரலாற்றுச சான்றுகளாக விளங்கி வருகிறது.

நம் இன தமிழ் ஈழ மக்கள் இலங்கையில் நடந்த இறுதிக்கட்ட போரில், இலங்கை அரசால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

கொத்து, கொத்தாக குண்டுகளை வீசியும், உயிருடன் புதை குழிகளில் தள்ளியும் கொலை செய்யப்பட்டனர். இந்த துயர சம்பவங்களை தமிழ் இன உணர்வு உள்ள உலக மக்களுக்கு நினைவூட்டும் வகையில் இங்கு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முற்றத்தை கடந்த 3 ஆண்டுகளாக எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் உண்மையுடனும், நேர்மையுடனும் தமிழ் இன ஈழ மக்களுககாக வாழ்ந்து வரும் பழ. நெடுமாறன் மனதில் கண்ட கனவுகளை இன்று நினைவுகளாக செதுக்கி இந்த முற்றத்தை இங்கே நிறுவி உள்ளார்.

இது ஈழத்தில் உயிரிழந்த நம் இன மக்களின் துயரத்தின் நினைவு சின்னம் இந்தியாவை ஆள வந்த வெள்ளையர்களை எதிர்த்து நம் எல்லையை விட்டு அடித்து விரட்டினான புலித்தேவன்.

வெள்ளையனை எதிர்த்து போராடினான் கட்டபொம்மன். அதேவழியில் ஈழத்தில் நம் மக்களை காப்பாற்ற இலங்கை அரசு எடுத்த ஆயுதத் தாலேயே எதிர்த்து நம் இன மக்களுக்குப்போராடினான் பிரபாகரன்.

ஈழத்தில் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களை கண்டித்து முத்துகுமார் உள்ளிட்ட 20 பேர்களின் திருவுருவ சிலைகள் சிற்பங்களாக இங்கு செதுக்கப்பட்டுள்ளன.

விடுதலை போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் விடுதலைக்காக, உரிமைக்காக போராடியவர்களின் படங்கள் இங்கு இடம்பெற்றுள்ளன.

நாம் அனைவரும் மதம், இனம், சாதி இவைகளை கடந்து தமிழன் என்ற உணர்வை மனதில் ஏற்படுத்த வேண்டும்.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் எந்த அரசியல் கட்சி தலைவர்கள் வந்து வீரவணக்கம் செலுத்துகிறார்களோ அவர்களுக்கு தான் எதிர்வரும் காலங்களில் நாம் வாக்கு அளிக்க வேண்டும்.

50 ஆயிரம் ஆண்டுக்கு மேல் மூத்த வரலாற்று பெருமையைச் சார்ந்தது தமிழ் இனம். ஆனால் நம் தமிழ் இன மக்களுக்கு இலங்கையில் வாழ இடமில்லை.

வரலாற்று சான்றில் எந்த இனத்திற்கும் இது போன்ற கொடுமைகள் நிகழ்ந்தது கிடையாது. இலங்கையில் தனி தமிழ் ஈழம் உருவாகுவதற்கு நாம் அனைவரும் போராட வேண்டும். இந்த நினைவு முற்றத்தில் ஏற்றப்பட்டு உள்ள சுடரை நாம் அனைவரும் அணையாமல் பாதுகாக்க வேண்டும். ஈழத்தில் தனி தமிழ் ஈழம் அமைந்தால் தான் நம் இன மக்களை நாம் காப்பாற்ற முடியும். தனி ஈழம் அமைவதுதான் ஒரே தீர்வு. உலக வரலாற்றில் தமிழன் போல் வாழ்ந்தவனும் இல்லை. வீழ்ந்தவனும் இல்லை.

இந்த மண்ணில் வாழும் உரிமை எவனுக்கும் உண்டு. ஆனால் ஆளும் உரிமை நமக்கு மட்டும் தான் உண்டு. ஈழத்தில் தனித் தமிழ் ஈழம் விரைவில் உருவாகும். இதற்கு இந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் ஒரு தொடக்கமாக இருக்கும். தனித் தமிழ் ஈழ விடுதலைக்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்றார். (2)

# பிலிப்பைன்ஸ் நாட்டில் ஹையான் புயலில் சிக்கி 10 ஆயிரம் பேர் உயிரிழப்பு

## மீட்புப் பணிகள் தொடர்கின்றன

(மணிலா)

**பிலிப்பைன்ஸ் நாட்டை தாக்கிய ஹையான் புயலில் சிக்கி 10 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.**





புயல் கரையை கடந்த போது மணிக்கு 325 கி.மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசியது.

அதனால் பலத்த மழை கொட்டியது. கடலில் சுமார் 15 அடி முதல் 20 அடி உயரத்துக்கு அலைகள் எழும்பின. அதனால் குடியிருப்புக்குள் தண்ணீர் புகுந்தது.

"ஹையான்" புயலின் கோர தாண்டவத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய பகுதியில் உள்ள லிதே தீவு கடும் பாதிப்புக்குள்ளானது. லிதே மாகாணத்தின் தலைநகர் தக்லோபான் நகரம் ஆக்ரோஷமான கடல் அலைகளால் கடும் சேதத்துக்கு ஆளானது.

இதனால் கடற்கரை ஓரம் இருந்த வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாகின. இது தவிர வெள்ளப் பெருக்கில் பல நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

இதனால் ஏராளமானவர்கள் உயிரிழந்தனர். இடிபாடுகளை அகற்றி மீட்பு பணியில் குழுவினர் ஈடுபட்டனர். மேலும், மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு இறந்தவர்களின் உடல்களும் மீட்கப்பட்டன.

இதுவரை சுமார் 600 உடல்கள் மீட்கப்பட்டதால் ஆயிரம் பேர் பலியாகி இருக்கலாம் என கருதப்பட்டது. தற்போது தோண்ட தோண்ட சடலங்கள் வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை 10 ஆயிரமாக உயர்ந்துள்ளது என கணக்கிடப்பட்டுள்ளதாக லிதே மாகாண ஆளுநர் டொம் னிக் பெட்டில்லா தெரிவித்துள்ளார்.

இந்தப் புயல் மத்திய பிலிப்பைன்சில் உள்ள 6 தீவுகளை தாக்கியது. இதில் லிதே தீவுதான் மிக கடுமையான தாக்குதலுக்குள்ளானது.

பிலிப்பைன்ஸ் நாட்டை துவம்சம் செய்த "ஹையான்" புயல் அயல் நாடான வியட்நாமை நோக்கி நகர்ந்தது. அது இன்று வியட்நாமை தாக்கும் என அஞ்சப்படுகிறது. எனவே, கடலோரம் தாழ்வான பகுதிகளில் வாழும் சுமார் 2 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மணிக்கு 300 கி.மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்வதால் கடுமையான சேதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இங்கு சுமார் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் இராணுவ வீரர்கள் மீட்பு பணிக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மீட்பு பணிகளுக்கு கப்பல் , விமானங்கள் உள்ளிட்டவைகளை அனுப்பி வைப்பதாகவும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் தயாராக இருப்பதாக அமெரிக்காவின் பெண்டகன் அமைப்பு கூறியுள்ளது. (2)

# ரொக்கெட் தாக்குதல்; ஆறு குழந்தைகள் பலி!

(டமாஸ்கஸ்)



சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் ரொக்கெட் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் 6 குழந்தைகள் பலியாகினர். 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

சிரியாவின் கிளர்ச்சியாளர்கள் நேற்று முன்தினம் வடக்கு மாகாணத்தில் இருந்து தெற்கு நோக்கி இடம்பெயர முயன்றனர். அப்போது நடந்த சண்டையில் கிளர்ச்சியாளர்கள் ரொக்கெட் குண்டு வீசி தாக்கியுள்ளனர். இதில் 6 குழந்தைகள் பலியாகினர்.

6 பேர் படுகாயம் அடைந்தனர். கடந்த பெப்ரவரி மாதம் கிளர்ச்சியாளர்கள சிரியாவின் இராணுவ தளத்தை கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. (2)




# ஈரான் அணு உலை விவகாரம் குறித்த பேச்சுவார்த்தை தொடரும்


(ஜெனீவா)

ஈரான் அணு உலை விவகாரம் குறித்த பேச்சுவார்த்தை உடன்பாடுகள், எதுவும் எட்டப்படாமல் நிறைவடைந்துள்ளது எனினும் எதிர்வரும் 20 ஆம் திகதி மீண்டும் பேச்சுவார்த்தை தொடருமென ஐரோப்பிய யூனியன் வெளியுறவு கொள்கை தலைவர் கேத்தரின் அஷ்டான் தெரிவித்துள்ளார்.

ஈரான் அணு உலை விவகாரம் குறித்து சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனவாவில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அதில் அமெரிக்கா, பிரானஸ் உள்ளிட்ட 6 நாடுகளின் அமைச்சர்கள், பிரதிநிதிகளும், ஈரான் வெளியுறவு மந்திரியும் கலந்து கொண்டு விவாத்தித்தார்கள். இந்தக் கூட்டம் உடன்பாடு எதுவும் ஏற்படாமல் நிறைவடைந்தது.என்றாலும் இது இறுதி பெறவில்லை. சுமூக பேச்சுவார்த்தை தொடரும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜான் கெர்ரி, பிரான்சு அமைச்சர் லாரேன்ட் பாபிஸ் மற்றும் ஈரான் அமைச்சர் முகமது ஜாவித் சாரிப் ஆகியோர் நம்பிக்கை தெரிவித்தனர்.

ஐரோப்பிய யூனியன் வெளியுறவு கொள்கை தலைவர் கேத்தரின் அஷ்டான் இதுதொடர்பாக கூறுகையில், மீண்டும் 10 நாளில் கூடி பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம். அநேகமாக எதிர்வரும் 20 ஆம் திகதி பேச்சு நடைபெறும் என்றார். (2)



இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள குவைத் நாட்டு பிரதமர் ஷேக் ஜாபர் அல் முபாரக் அல் ஹமத் அல் சாபா தலைநகர் புதுடில்லியில் வைத்து ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# இராமாயணத்தை கற்பதன் மூலம் சமுதாயத்தை முன்னேற்றலாம்

## டேவிட் கமரூன் புகழாரம்



பிரித்தானியர்கள் இராமாயணத்தை கற்பதன் மூலம் சமுதாயத்தையும், குடும்பத்தையும் மேம்படுத்த முடியும் என்று அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு,

இந்த 21 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் மிக முக்கிய நட்பு நாடாக இந்தியா விளங்கி வருகிறது.

பிரித்தானியா தன்னை மேலும் மேலும் வளர்த்து கொள்வதற்கு இந்தியாவின் நட்பு மிகவும் இன்றியமையாததாகவுள்ளது. ஐரோப்பாவுடன் இணைந்து நமது பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியா பல்வேறு முதலீடுகளை செய்து வருகிறது.

அதேபோல், இந்தியாவில் முதலீடு செய்துள்ள முதல் 3 நாடுகளில் பிரித்தானியாவும் ஒன்று. நான் பிரதமரான பின்னர் 3 முறை இந்தியா சென்றுள்ளேன்.

இந்தியாவிடம் இருந்து பிரித்தானியா கற்றுக்கொள்ள ஏராளமானவை உள்ளன.நான் இராமாயணத்தை படித்துத்தான் இந்து மதத்தை புரிந்து கொண்டேன், அது ஒரு அற்புதமான அனுபவம்.

இராமாயணத்தை கற்றுக் கொள்வது என்பது சமுதாயத்தை மேம்படுத்த, குடும்பத்தை மேம்படுத்த, தனி மனிதனை மேம்படுத்த உதவும்.இந்த மதிப்பீடுகள் யாவும் பிரித்தானியாவிற்கு மிகவும் பயன்படக் கூடியவை என்று தெரிவித்துள்ளார். (2)

# மாலைதீவு ஜனா.தேர்தல் முடிவு அறிவிப்பில் சிக்கல்



மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் 46.4 சதவீத வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார். எனினும் பதவியேற்பதில் சிக்கல் நிலைதோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம்மாலைதீவுஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் வசிக்கும் வாக்களிக்க தகுதி வாய்ந்த 2 இலட்சத்து 39 ஆயிரத்து 105 வாக்காளார்கள்வாக்களிக்கவசதியாக 475வாக்கு பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

அன்றைய தினம் தேர்தலில் 2 இலட்சத்து 3 ஆயிரம் வாக்குகள் பதிவானதாக அரசு வட்டாரங்கள் அறிவித்துள்ளன. வாக்கு எண்ணிக்கை மாலை 5 மணிக்கு தொடங்கியது.மொத்தம் பதிவான வாக்குகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமாக பெறும் வேட்பாளர் வெற்றி பெற்ற ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார் என்ற நிலையில், முன்னாள் ஜனாதிபதி முஹமது நஷீத் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி பெற்ற வாக்குகளைவிடபுள்ளி59சதவீதம்அதிகமாக 46.4 சதவீத வாக்குகளை பெற்று முதல் இடத்தில் காணப்பட்டார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட மாலைதீவு முற்போக்கு கட்சி வேட்பாளர் அப்துல்லா யாமீன் கடந்த தேர்தலை விட 4.68 சதவீதம் அதிகமாக 30.3 சதவீதம் வாக்குகளை பெற்று இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார்.எனினும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு 50 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெற்றாக வேண்டும் என்ற நிலையில் இன்று இரண்டாம்சுற்றுதேர்தல்நடத்தப்படவேண்டும்.

புதிய ஜனாதிபதி பதவியேற்பதற்கான காலக்கெடு இன்றுடன் முடிவடைவதால் இரண்டாம் சுற்று தேர்தல் நடத்தப்படுமா? அல்லது சுப்ரீம் நீதிமன்றம் ஏற்கனவே அறிவித்தது போல் தற்போதைய ஜனாதிபதி முஹமது வாஹித் நிரந்தர ஜனாதீபதியாக பதவியில் தொடர்வாரா? என்பது இன்று தெரியவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# மாநாட்டை முன்னிட்டு நல்லெண்ண அடிப்படையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

## ஜனாதிபதிக்கு ஆனந்தசங்கரி கோரிக்கை

(பூந்தோட்டம்)

**பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு நல்லெண்ண அடிப்படையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஏனைய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் இச் சந்தர்ப்பத்தில் அவர்களை கௌரவிக்கும் முகமாக சிறைச்சாலைகளில் ஒரு விதமான விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் எனப்படும் ஆண் பெண்கள் அந்த பெண்களினுடைய பிள்ளைகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்து நல்ல பெயரை வாங்குங்கள எனவும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வன்னி தொகுதிக்கான நிர்வாகிகள் தெரிவு நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு கோரியுள்ளேன். அவர் அதனை செய்வார் என்ற நம்பிக்கை உள்ளது. அதனை அவர் செய்யவும் வேண்டும். அத்துடன் வீடுடைப்பது மற்றும் காணி பறிப்பதையும் நிறுத்துமாறும் கடிதம் மூலம் கேரியுள்ளேன்.

இந் நிலையில் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எடுத்த தீர்மானமாக இருந்தால் அதனைப்பற்றி நான் எதுவும் கதைத்திருக்கமாட்டேன்.

உண்மையில் என்னிடம் கேட்டிருந்தால் இவர்கள் எடுத்த தீர்மானத்திற்கு மாறான தீர்மானத்தை சொல்லியிருப்பேன். கூட்டமைப்பில் உள்ள சிலருக்கு பொதுநலவாய அமைப்பு என்றால் என்னவென்று தெரியாது.





அதைப்பற்றி தெரிந்திருந்தால் இந்தியாவைக் கூட போக வேண்டாம் என கூற மாட்டார்கள். அம் மாநாட்டில் மனித உரிமை விடயம் மட்டும் பேசப்படும் விடயம் அல்ல. எமக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றது. அவ்வாறான பிரச்சினைகள் வந்த போதெல்லாம் நாம் பொதுநலவாய அமைபபை நாடியுள்ளோம். அவை எமக்கு உதவியுள்ளது. ஆகவே நாம் அங்கு சென்று பேசலாம். ஏன் பகிஷ்கரிக்க வேண்டும்.

நாம் அங்கு சென்று பிரித்தானியாவிடம் நீங்கள் தந்த சோல்பரி அரசியல் அமைப்பு எனற முள்ளுத்தானே எமக்கு குத்துகின்றது என சொல்ல வேண்டும். அதனைவிடுத்து சிலரின் அரசியல் வளர்ச்சிக்காக அவர்கள் சொல்வதெல்லாம் சரி என்று கூற முடியாது. எனவே அம் மாநாட்டுக்கு செல்வது சிறப்பானதாக இருக்கும்.

இந் நிலையில் வட மாகாண சபைத்தேர்தலில் எனது தோல்விக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு மேல் முழுமையாக குற்றத்தை கூற முடியாது.ஆனால் தமிழ் தேசியக்கூட் டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சியான் தமிழரசுக்கட்சியே தோல்விக்கு காரணமாக அமைந்தது.

மாகாணசபைக்கு முன்னர் அனைத்து மாவட்டத்திலும் ஐந்து தலைவர்களையும் உள்ளடக்கி கூட்டங்கள் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த வகையிலேயே நான் சில கூட்டங்களில் பங்கேற்று பேசியுள்ளேன். ஆனால் சில கூட்டங்கள் தொடர்பில் எனக்கு அறிவித்தல் தருவதில்லை.

அத்துடன் இராஜதந்திரிகளின் சந்திப்புகளுக்கும் என்னை அழைப்பதில்லை. அது மட்டுமல்ல நீண்ட அரசியல்வாதி என்று என்னிடம் ஆலோசனையை கேட்கின்றனரா? அல்லது சந்திப்பின் பின்னர் என்ன நடந்தது என கட்சித்தலைவர் என்ற வகையில் என்னிடம் தெரிவிக்கின்றனரா. இவையெல்லாம் திட்டமிட்டு தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைப்பதற்காக சிலர் செய்யும் சூழ்ச்சியே.

ஆனால் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உடைந்து போகக்கூடாது என்பதற்காகவே நான் இவ்வளவு காலமும் பொறுமையாக இருந்து வருகின்றேன். எனினும் உடைப்பதற்காக இடம்பெறும் சதிக்கு நான் எடுபடப் போவதில்லை.

கடந்த மூன்று வருடங்கள் எனது இனத்திற்காக சொல்ல முடியாத துன்பங்களை நான் சுமந்து கொண்டிருக்கின்றேன். எனினும் எனது சுய கௌரவம் என்பது இருக்கின்றது. எனினும் சில காலங்களுக்கு இந் நிலையை பார்ப்பேன். இனியாகினும் திருந்துகின்றார்களா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

இந் நிலையில் எமது கட்சி தொடர்பான நிலைப்பாட்டை மக்களுக்கு விளங்கப்படுத்தி தமிழர் விடுதலைக கூட்டணியை கோலோச்ச வைக்க வேண்டியது எனது கடமையாகும் எனவும் தெரிவித்தார். (ம-6-250-266)




# வேதன ஏற்றங்கள் தொடர்பில் அரச பட்டதாரிகள் முறைப்பாடு

## வடக்கு முதல்வரிடம் முன்வைப்பு

(கிளிநொச்சி)

வடமாகாண முதலமைச்சரிடம் வட மாகாண அரச சேவை பட்டதாரிகள் சங்கம் கடந்த 3 வருட காலமாக தங்களுக்கு மறுக்கப்பட்ட வேதன ஏற்றங்கள் தொடர்பான முறைப்பாட்டினை முன் வைத்துள்ளது.

அரசாங்கத்தினால் 1774/31 இலக்க 2012 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய வடக்கு மாகாண சபையினால் வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான சேவைப பிரமாணக் குறிப்பு தயாரிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் , முன்னர் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களாக இருந்த அனைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என்ற தற்போதைய பதவிக்கு உள்ளீர்க்கப்பட்டார்கள்.

மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவினால் இவர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் உத்தியோகத்தர்களின் வகுப்பு குறிப்பிடப்படவில்லை.

இதனால் இவர்களுக்குரிய வேதன ஏற்றத்தை வழங்குவதில் திணைக்களத் தலைவர்களிடம் தெளிவின்மை காணப்படுகின்றது.

தமது அங்கத்தவர்களின் வேதன முறைப்பாட்டை நீக்கி வைக்குமாறு சங்கத்தின் செயலர் கே.எஸ். மயூரன் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கடிதம் மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார். (ம-254)

# பல்கலைக்கு தெரிவான மாணவர்களுக்கு உதவிகள்

(பூந்தோட்டம்)

மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கு விசேட பரிசில்களும் நிதியுதவியும் நேற்று முன்தினம் வழங்கி கௌரவிக்கப் பட்டது.

நானாட்டான் பிரதேச கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தினால் நடத்தப்பட்ட இந் நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் அகில இலங்கை மட்ட விளையாட்டுப்போட்டியில் நீளம் பாய்தல் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்ற மாணவனுக்கும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் விசேட பரிசில்களும் நிதி உதவிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இதன்போது சமாசத்தால் புதிதாக அமைக்கப்பட்ட அரைக்கும் ஆலையும் அமைச்சரினால் திறந்துவைக்கப்பட்டதோடு நானாட்டான் பிரதேச செயலாளரினால் சமாசத்திற்கு புதிய தையல் இயந்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனிஸ்வரன், கல்வி, கலாசார, பண்பாட்டு விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் த. குருகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-266)



வவுனியா வைரவபுளியங்குளம் இளவேனில் பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையத்தின் இவ் ஆண்டு கலைவிழா நேற்று முன்தினம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது... (படங்கள்:- குருமன்காடு,பூந்தோட்டம் செய்தியாளர்கள்)

தவறுகளை ஒப்புக் கொள்ளும் துணிவும் திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான வழிகள்.

– *லெனின்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நோயாளர்களைப் பார்வையிடும் பாஸ் நடைமுறையில் மாற்றுவழி தேவை

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் விடுத்துள்ள கட்டுப்பாடுகளை ஏற்றுக் கொள்வதற்குப் பொதுமக்கள் தயாராக இல்லை என்பதைக் கூறித்தான் ஆகவேண்டும்.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் வைத்தியசாலையில் சனநெருக்கடி ஏற்படுவதாகவும் இதனால் நோயாளர்களும் அவர்கள் தொடர்பில் பணியாற்றுவோரும் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறும் வைத்தியசாலை நிர்வாகம், அத்தகைய நெருக்கடிகளைத் தவிர்க்க பாஸ் நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறுகிறது.

எனினும், இத்தகைய பாஸ் நடைமுறையை அனுசரித்துச் செயற்படுவதற்கு பொதுமக்கள் தயாராக இல்லை. எனது உறவினர் ஒருவர் இன்றோ நாளைக்கோ என்ற நிலையில் இருக்கின்றார். அத்தகையவரை ஒருதடவையேனும் பார்க்காவிட்டால் எங்கள் உறவு நிலை பாதிக்கப்படும்.

எனவே இத்தகைய சந்தர்ப்பத்தில் பாஸ் நடைமுறையை ஏற்றுக் கொள்ள முடியாது.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தை வரையறுத்துவிட்டு, பாஸ் நடைமுறையையும் அமுல்படுத்துவது நியாயமில்லை என்பது பொதுமக்கள் தரப்பு நிலைப்பாடு.

வைத்தியசாலை நிர்வாகம் பாஸ் நடைமுறையை அமுல்படுத்துவதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பயன்படுத்த, பொதுமக்களோ தங்களைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களே தடுப்பதாகவும் அவர்கள் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் செயற்படுவதாகவும் குற்றஞ்சாட்ட,

யாழ். போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் பொது மக்களுக்கும் இடையில் அடிக்கடி சண்டையும் முரண்பாடும் தாக்குதல்களும் நடந்தேறுகின்றன.

சுருங்கக் கூறின் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தில் குறைந்தது இரண்டு மூன்று பேர் காயமடைவதற்கான சூழ்நிலை உருவாகி வருகின்றது.

சில வேளைகளில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளி குணமாகி வீடு செல்ல, அவரைப்பார்க்க வந்தவரும் பாதுகாப்பு உத்தியோகத்தரும் யாழ். போதனா வைத்தியசாலையின் பின்வாசலால் வீடு செல்லும் அவலமும் ஏற்படலாம்.

எனவே இது விடயத்தில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டும். அதேநேரம் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் நோயாளர்களைப் பார்வையிட வருகிறவர்கள் ஒரு பதற்றமான – ஏக்கமான மனநிலையில் இருப்பார்கள் என்பதைப் புரிந்து கொண்டு தமது மொழி நடைகளைப் பக்குவப் படுத்தவேண்டும்.

பக்குவமான வார்த்தைப் பிரயோகங்கள் சமுகமான சூழ்நிலையை உருவாக்கும். இதனை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பலரும் செய்கின்றனர்.

ஆனால் ஒரு சில பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் முறாள்தனங்கள் பார்வையாளர்கள் – பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என்ற தரப்புகளுக்கு இடையில் சண்டையை ஏற்படுத்தி விடவே செய்கிறது.

எதுவாயினும் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான மாற்று வழி பற்றி யாழ். போதனா வைத்தியசாலை அவசரமாகச் சிந்திப்பதும் செயல்படுவதும் அவசியம்.

# அமெரிக்க அதிகாரிகளுடன் கூட்டமைப்பினர் பேச்சு

(கொழும்பு)

அரசாங்கம் பொதுநலவாய மாநாட்டுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து விட்டு நாடு திரும்பியுள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இச் சந்திப்பில் மனிதஉரிமைகள் விவகாரமே முக்கியத்துவப்படுத்தப் பட்டிருந்தது.

அண்மையில் புலம் பெயர் தமிழர்களின் அழைப்பின் பேரில் அமெரிக்கா சென்றிருந்த போதே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளை இவர்கள் சந்தித்துள்ளனர்.

இதன்போது, வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவினர் அமெரிக்க அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முன்னேற்றம் அல்லது குறைபாடு குறித்தும் இதில் கலந்துரையாடப் பட்டுள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், நவநீதம்பிள்ளை சமர்ப்பித்த வாய்மொழி அறிக்கை குறித்தும் கலந்துரையாடினோம்.

எந்த முன்னேற்றமும் இல்லாவிட்டால், அனைத்துலக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப் போவதாக அவர் கூறியதை சுட்டிக்காட்டினோம்.

அதேவேளை, பொதுநலவாய மாநாட்டுக்காக வரும் சில நாடுகளின் தலைவர்கள் வடக்கே வரும் போது, அவர்களைச் சந்தித்து இந்த விவகாரத்தை எழுப்பவுள்ளோம்.

காணிப் பிரச்சினை, இராணுவமயமாக்கல், காணாமற்போதல்கள் குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-2)

## பிரபாகரனின் படம் வைத்திருந்த நெடுமாறன் மீது வழக்குப் பதிவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படம் பொறித்த விளம்பரப் பதாகைகளை வைத்திருந்ததாகக் கூறி, உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ. நெடுமாறன் உட்பட 6 பேர் மீது தஞ்சாவூர் தாலுகா பொலிஸார் இரு வழக்குகள் பதிவு செய்தனர்.

தஞ்சாவூர் அருகே விளார் கிராமத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத் திறப்பு தொடர் நிகழ்ச்சி தொடங்கி நடைபெற்று வருகிறது.

இந்த நிகழ்ச்சியையொட்டி, விளார் புறவழிச் வீதியில் விளம்பரப் பதாகை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இதுதொடர்பாக, பழ. நெடுமாறன், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத் திறப்பு நிகழ்ச்சி குழுத் தலைவர் அய்யனாபுரம் சி. முருகேசன், உறுப்பினர்கள் சந்திரேசன், காசி ஆனந்தன், வி. தீனதயாளன், உலகத் தமிழர் பேரவை அறக்கட்டளை உறுப்பினர் இளவழகன் ஆகியோர் மீது தஞ்சாவூர் தாலுகா பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வழக்குப் பதிவு செய்தனர்.

பொது-இடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த விளம்பரப் பதாகையில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் உருவப் படம் இடம்பெற்றுள்ளதாகவும், பொலிசாரின் விதிமுறைகள், வழிகாட்டு தலை மதிக்கவில்லை எனவும் கூறி இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று, அதே பகுதியில் சுவரொட்டி ஒட்டியதாகவும் அவர்கள் 6 பேர் மீது தாலுகா பொலிஸார் மற்றொரு வழக்குப் பதிவு செய்துள்ளனர். (எ-2)

## மகாதேவ சுவாமிகளின் குருபூசை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கந்தர்மடம் சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தின் 4-வது குருபீடாதிபதி ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகளின் குரு பூசை நிகழ்வு இன்று முற்பகல் 11 மணியளவில் வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

வேதாந்தமடத்தின் 8ஆவது குரு பீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்யா சாகிர சுவாமிகளின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், தாவடியூர் கே. எல். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து சுவாமிகளின் சமாதிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளது. (செ)

## ஆட்டோ - மோ. சைக்கிள் விபத்து வயோதிபர் சம்பவ இடத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ். கல்வியங்காடு சட்ட நாதர் கோவிலுக்கு அருகில் இடம் பெற்றள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கல்வியங்காட்டைச் சேர்ந்த கி. சிறிஸ்கந்தராஜா (வயது 62) என்ற முதியவரே சம்பவ இடத்தில் உயிரிழந்தவராவார்.

ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற மேற்படி விபத்தில் உயிரிழந்த வயோதிபரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-6)

## இருவரைக் கொண்டு சென்றவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பாதசாரிக் கடவையில் வீதியைக் கடந்தபோது இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த இருவரை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றவர் மரணமடைந்த சம்பவம் ஒன்று பண்டாரகமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பண்டாரகமை அலுபோமுள்ள என்னுமிடத்தில் உள்ள பாதசாரிக் கடவையில் வீதியைக் கடந்த பெண் மற்றும் 58 வயதான இருவர் மீதே வான் ஒன்று மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த இருவரையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற ஆண் ஒருவரே வைத்தியசாலையில் திடீரென மரணமடைந்துள்ளார் என்று பொலிசார் தெரிவித்தனர். (எ-11)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சமுதாயத்தினிடையே நட்புக் கெடக் காரணம்?



மக்களிடம் சிந்தனையாற்றல் வளர்ந்துள்ள இக்காலத்தில் போர்தேவையே இல்லை. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவினிடம் உலக நாடுகளின் எல்லைக்கோடுகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்புவித்துவிட்டு எந்தநாடும் பிறநாட்டுக்கு அஞ்சாமலும் பிறநாட்டைப் பகைக்காமலும் வாழலாம்.

மனித சமுதாயத்தில் வாழ்வின் வளங்கள் அனைத்தையும் போர்அழிக்கவல்லது. ஆதிகால மக்களிடம் சிந்தனை வளராத காலத்தில் அவர்கள் விலங்கினத்தைப்போன்று பிற உயிரைத் துன்புறுத்தியே வாழ்ந்த காலத்தில் தோன்றிய முரட்டுச் செயல்தான் போர். அக்காலத்தோடு இக்காலத்தை ஒப்பிட்டுப்பார்த்தால் மனிதனின் சிந்தனை எவ்வளவோ உயர்ந்திருக்கிறது. நிலவுக்குப் பயணம் செய்யவும் கணனி சாதனங்களைத் தினசரி வாழ்வில் பயன்படுத்தவும் மனிதனின் அறிவு உயர்ந்து உள்ளது. இக்காலத்திலும் போர் மனித சமுதாயத்தில் உருவாகின்றது. மக்களைச் சீர்குலையச் செய்கிறது என்றால் இது பெரும் தவறு ஆகும். போரினால் எத்தனை மனித உயிர்கள் துன்படைகின்றன? நாசமடைகின்றன என்று எளிதாக அனைவரும் உணரலாம். மனிதகுல வாழ்வைச் சீரமைத்துக்கொள்ளப் பொருள் உரிமைச்சட்டங்கள், எளியவரை வலியவர்கள் தாக்கித் துன்புறுத்தாமல் காக்கும் சமுதாய நலச் சட்டங்கள் இவற்றை இயற்றவும் நிர்வாகம் செய்யவும் அரசியல் முறையில் சிறந்துள்ள காலம் இது.

இறைநிலையை உணர்த்தி, அறநெறியைப் போதித்து, வாழ்க்கை ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் காப்பதற்காக இக்காலத்தில் எத்தனை மதங்கள் தோன்றிச் செயலாற்றி வருகின்றன. இன்னமும் பல உயிர்களை வருத்தியும் கொன்றும் அவர்கள் உடைமைகளை அழித்தும் நீடித்து வரும் போர் உலகில் இருக்கின்றதென்றால் தவறு எங்கே இருக்கின்றது? ஆட்சி முறையில் பொறுப்பின்மையும் மதத் தலைவர்களிடையே உண்மையாக கடவுள் உணர்வின்மையும் அன்றோ காரணம்?

# வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் மு/கருநாட்டுக்கேணி அ.த.க.பாடசாலை

(முல்லைத்தீவு)

**மு/கருநாட்டுக்கேணி அ.த.க.பாடசாலை பல வளப்பற்றாக் குறைகளுடன் காணப்படுவதால் மாணவர்கள் கல்வி கற்பதில் பல இடையூறுகளை எதிர்கொள்வதாக மாணவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.**

கடந்த 1839 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இப்பாடசாலை 1984ஆம் ஆண்டுவரை தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 120 இற்கு மேற்பட்ட மாணவர்கள் மீள்குடியேற்றத்துடன் 1984 யுத்தத்தால் இடம்பெயர்ந்து 1985-1989ஆம் ஆண்டுவரை இயங்கவில்லை. கடந்த 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு தரம் 1 தொடக்கம் தரம் 9 வரை 100 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர்.

1991 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து 1996 ஆம் ஆண்டுவரை இயங்கவில்லை.1997 ஆம் ஆண்டு வற்றாப்பளை மகா வித்தியாலயத்துடன் இணைந்து இயங்கியது.

1998-2008ஆம் ஆண்டுவரை மதவளசிங்கன் குளம் கிராமசேவையாளர் பிரிவில் உள்ள பூதன்வயல் கிராமத்தில் தரம் 1 தொடக்கம் 5 வரை இயங்கியது.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கருநாட்டுக்கேணி கிராமத்தில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரை 38 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.

இங்கு வகுப்பாசிரியர்கள் 5 தேவைப்படுகின்ற போது 5 ஆசிரிய உதவியாளர்களே காணப்படுகின்றனர். இங்கு குடிநீர்க்கிணறு, செயற்பாட்டறை, விளையாட்டறை, முதலுதவிப்பெட்டி,தொலைபேசி, நிழற்பிரதி இயந்திரம் என்பன இன்மையால் மாணவர்கள் பெரும் இடையூறுகளை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் மின்சார வசதி, கணனி வசதி, நூலகம், விளையாட்டு முற்றம், விளையாட்டுப் பொருட்கள், கற்றல் உபகரணங்கள் என்பனவும் இல்லை. சுற்றுவேலி அமைக்கப்படாமையால் கால்நடைகள் பாடசாலையை அசுத்தம் செய்கின்றன.

மைதானம், உள்வீதிகள் என்பன புனரமைக்கப்படாதுள்ளது. அலுவலக தளபாடம் போதாது. ஆசிரியர் ஓய்வறை வசதி, அதிபர் விடுதி, கலையரங்கம், பிரார்த்தனை மண்டபம், தேநீர்ச்சாலை, களஞ்சிய அறை, வாகனத்தரிப்பிடம், சமையற்கூடம் என்பனவும் இல்லை.

அரச, தனியார் பேருந்து வசதி ஏற்படுத்தப்படாமையால் மாணவர்கள் இடையூறுகளை எதிர்கொண்டே பாடசாலைக்கு வருகின்றனர். ஆசிரியர்களின் விடுதி பொருத்தமான இடத்தில் இல்லாது காட்டுப்பகுதிக்குள் உள்ளதால் ஆசிரியர்கள் பல கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுத்து வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து கல்விச் செயற்பாட்டிற்கு உதவ வேண்டுமென மாணவர்களின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-267)

## சிறுமிகளை காணவில்லை




(குருமன்காடு)

வவுனியாவில் சிறுமிகள் இருவரைக் காணவில்லை என முறைப்பாடு செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.


நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வவுனியா பொலிஸில் இவர்களின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கோவிலுக்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்ட 16 மற்றும் 17 வயதான சிறுமிகள் இருவரே காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(ம-250)




## பயிற்சிப்பட்டறை



யாழ்.மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் நீலக்கால் நண்டு பிடிப்பதனைக் தடுத்து இனத்தைவிருத்தி செய்வதற்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் வவுனியா நெல்லி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

நெதர்லாந்து நாட்டின் அனுசரணையுடன் எஸ்.ஈ.ஏ.எஸ்.எல். நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி நெறியில் யாழ், மன்னார் மாவட்டங்கள் உட்பட பல மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இதில் யாழ்.மாவட்ட கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம், யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எ.எமிலியான் பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9-19)

## வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுங்கள்

(கண்டாவளை)

சுண்டிக்குளம் சந்தியில் இருந்து சுண்டிக்குளம் கடற்கரை செல்லும் பிரதான வீதி புனரமைப்பு செய்யப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் இவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.



இவ்வீதியால் 2 கிலோமீற்றர் தூரம் வரையான பகுதி புனரமைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டளவு தூரவீதியே புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இவ்வீதியால் தினமும் பாடசாலை மாணவர்கள் மற்றும் பயணிகளும் பயணிக்கின்றனர்.

எனவே மழைகாலத்திற்கு முன்னர் இவ் வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவவேண்டுமென பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

## பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு சுயதொழில் உதவி

(குருமன்காடு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் பெண்கள் தலைமை தாங்கும் 33 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா சுயதொழில் ஊக்குவிப்பு தொகையாக சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாபன் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார்.

மேற்படி பிரதேசத்திலுள்ள 15 கிராம அலுவலகர் பிரிவுகளிலிருந்து யுத்தத்தினால் கணவனை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 33 குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி நிதியினை பயனுள்ளதாக்கும்வகையில் கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு போன்ற சுயதொழில்களில் ஈடுபடுத்துவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ம-250)


## த.வி.கூட்டணியின் வன்னி தொகுதி நிர்வாகிகள் தெரிவு

(பூந்தோட்டம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வன்னி தொகுதிக்கான நிர்வாகிகள் தெரிவு நேற்று முன்தினம் வவுனியா இந்திரன்ஸ் ஹோட்டலில் இடம்பெற்றது.

அக்கட்சியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் இடம்பெற்ற இச் கூட்டத்தில் பலர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்து கொண்டதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றிருந்தது.

இதன் நிமிர்த்தம் வன்னி தொகுதிக்கான தலைவராக இராஜ. குகனேஸ்வரனும் செயலாளராக இந்திரன் சஜீந்திராவும் பொருளாளராக க. ஸ்ரீசங்கரும் உப தலைவராக சி.கிரிதரனும் உப செயலாளராக எஸ்.ரவி சங்கரும் நிர்வாக உறுப்பினர்களாக எஸ். ஜதுர்சன் மற்றும் கே. இரவீந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-266)





தமிழர் விடுதலைக்கூட்டணியின் வன்னி தொகுதி நிர்வாகிகள் தெரிவும் அங்கத்தவர் இணைப்பும் வவுனியா இந்திரன்ஸ் ஹோட்டலில் இடம் பெற்ற போது புதிய அங்கத்தவர்களின் விண்ணப்பங்களை கட்சியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரியிடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர்)

# இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது போட்டி மழையால் கைவிடப்பட்டது

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப பயணம் மேற்கொண்டுள்ள நியூ





சிலாந்து அணி மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுகிறது.

இதன் முதல் போட்டி நேற்று அம்பாந்தோட்டை, சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் கைல் மில்ஸ் பந்துவீச்சைத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பாடக் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியானது.

தொடக்க வீரராக களமிறங்கிய டிமுத் கருணாரட்ன, தான் சந்தித்த முதல் பந்திலேயே நியூசிலாந்து அணித் தலைவர் கைல் மில்ஸால் எல்.பி.டபிள்யூ ஆக்கப்பட்டார்.

அவரின்ஆட்டமிழப்பைத்தொடர்ந்த வந்த சங்கக்கார, டில்சானுடன்




இணைந்து சிறப்பாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

2-வது விக்கெட்டுக்காக இருவரும தமக்கிடையில் 137 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த வேளையில் குமார் சங்கக்கார 79 ஓட்டங்களுடன் அன்ரன் டேவ்ச்சின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ஜெயவர்த்தன ஒரு ஓட்டத்துடனும், சிறப்பாக ஆடிய டில்சான் 81 ஓட்டங்களுடனும் ஆட்டமிழநத னர்.

தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆடாத போதிலும் இறுதி வரை களத்தல் நின்று போராடிய அஞ்சலோ மத்தியூஸின் சிறப்பான ஆட்டத்தினால் 50 ஓவர்களின் நிறைவில் இலங்கை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக அணித்தலைவர் கைல் மல்ஸ் 49 ஓட்டங்களைக் கொடுதது 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

289 ஓட்டங்களை வெற்றியிலககாகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த நியூசிலாந்து அணி 4.2 ஓவர்களில் 1 விக்கெட்டை இழந்து 13 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழை காரணமாக ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது. எனினும் மழையின் தாக்கம் தொடரவே போட்டி வெற்றி தோல்வியின்றி கைவிடப்பட்டது.

இரு அணிகளுக்குமிடையிலான 2-வது போட்டி நாளை இதே மைதானத்தில் நடைபெறுகிறது.

## தொடரை வென்றது தென்னாபிரிக்கா பாகிஸ்தான் அணிக்கு ஏமாற்றம்

பாகிஸ்தானுக்கு எதிரான 4-வது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 28 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.இ) சென்றுள்ள பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கின்றன.



முதல்மூன்று போட்டி களின் முடிவில் தென்னாபிரிக்க அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்த நிலையில், நான்காவது போட்டி தலைநகர் அபுதாபியில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் டி வில்லியர்ஸ் துடுப்பெடுத்தாட முடிவு செய்தார்.

இதன் படி களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு குயின்ரன் டி ஹொக், ஹசிம் அம்லா ஜோடி நல்ல ஆரம்பம கொடுத்தது. முதல் விக்கெட்டுக்காக 87 ஓட்டங்களைச் சேர்த்த போது அம்லா (46) அரைச்சத வாய்ப்பை இழந்து வெளியேறினார். டூ பிளசிஸ் (10) ஏமாற்றினார். அணித்தலைவர் டி வில்லியர்ஸ் (30) பெரய அளவில் சோபிக்கவில்லை.

அபாரமாக ஆடிய குயின்ரன் டி ஹொக், பாகிஸ்தான் பந்துவீச்சை பதம்பார்த்தார். மொஹமட் இர்பான் பந்தை சிக்சருக்கு அனுப்பிய குயின்ரன் டி ஹொக், ஒருநாள் போட்டியில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். 50 ஓவர்கள் முடிவல் தென்னாபிரிக்க அணி 5 விக்கெடுக்களை இழந்து 266 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் குயின்ரன் டி ஹொக் சிறப்பாக ஆடி 112 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் மொஹமட் ஹபஸ் யுனைட்கான்ஆகியோர்தலா 2 விக்கெட்டுக்களையும், மொஹமட இர்பான ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணி 49.2 ஓவர்களில் 238 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் 65, அறிமுக வீரர் சொகைப் மசூட் 56 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் வேகப்புயல் டேல் ஸ்ரெய்ன 10 ஓவர்களில் 25 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதுடன் ஆட்ட நாயகன் விருதையும் தட்டிச் சென்றார். இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை தென்னாபிரிக்க அணி 3-1 எனக் கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது.

ஐந்தாவது மற்றும் கடைசியுமான போட்டி இன்று சார்ஜாவில் ஆரம்பமாகிறது.

## ஆளுநரின் உரையை...

துள்ளேன்.

போரின் பொழுது அப்பாவித் தமிழ்மக்கள் சுமார் 70 ஆயிரம் பேர கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. பல்லாயிரக் கணக்கானோர் அங்கவீனர்களாகவும், காயமடைந்தும், விதவைகளாகவும், அநாதைகளாகவும், ஏதிலிகளாகவும் ஆக்கப்பட்டனர். கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்களும் அழிக்கப்பட்டன.

போர் முடிந்தும் நான்கரை ஆண்டுகள் கடந்தும் பாதிப்புகளுக்கு உள்ளானவர்களுக்கான மறுவாழ்வு நிவாரணம்என்பனவழங்கப்படவில்லை உள்ளக விசாரணைகள் நடைபெறவில்லை. இந்த சூழ்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைபேரவையின் தலைவி திருமதி நவநீதம்பிள்ளை இலங்கை அரசு உரிய விசாரணைகளை நடத்தத் தவறும் பட்சத்தில் எதிர் வரும் ஆண்டு மார்ச் மாதம் சர்வதேச நீதி விசாரணையை நடத்த வேண்டி வரும் என எச்சரித்துள்ள சூழ்நிலையிலும் இலங்கை அரசு தனது போக்கை மாற்றுவதாக இல்லை.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுகாண வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலையே மறந்த சூழ்நிலையிலேயே இலங்கை அரசாங்கம் உள்ளது. பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு இலங்கையில் நடைபெறக் கூடாது என்பதற்காக அதில் பொது நலவாய நாடுகளில் தலைவர்களும் கலந்துகொள்ளக்கூடாது எனவும் வலியுறுத்தியும்,

தமிழ் இனப்படுகொலையை செய்த இலங்கை அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமிழ்இன அழிப்பு நடவடிக்கைகளை கைவிடுமாறு வலியுறுத்தியும் சர்வதேச சமூகம் சர்வதேச நீதி விசாரணைகளை நடத்தி நீதியைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் நிரந்தர அரசியல் தீர்வைப் பெற உதவவேண்டும் எனக்கோரி ஆளுநர் உரையை புறக்கணிப்பது எனத் தீர்மானித்துள்ளேன் என சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (எ-8)

## கலந்து கொள்ளா...

மன்மோகன் சிங் கருதப்படுவார்.

முன்னதாக, கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பதாக அறிவித்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போர்க்குற்றங்கள் தொடர்பான பாரதூரமான கேள்விகள் பலவற்றுக்கு பதில் கூற வேண்டியிருப்பதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் கூறியுள்ளார்.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரச படையினரால் நடத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படும் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள், சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், தமிழ் பொதுமக்கள் மீதான பாலியல் வல்லுறவுகள் உளளிட்ட விவகாரங்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணை ஒன்றை நடத்துமாறு மகிந்த ராஜபக்ஷவைக் கோரவுள்ளதாகவும் டேவிட் கமரூன் கூறியுள்ளார். (எ-8)

## நலன்புரி முகாமில் தங்கி...

டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்மாவட்டத்தில் இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி முகாம்களில் வாழும் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்றுப்பற்பகல் இடம்பெற்றது இந்தக் கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து வலிகாமம் வடக்கில (தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவு) பலாலி கிழக்கு ஜே/253 கிராம சேவையாளர் பிரிவிலும் பலாலி வடக்கு ஜே/254 கிராம சேவையாளர் பிரிவிலும் வலிகாமம் கிழக்கில் (கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவு) வளலாய் ஜே/284 ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேற்றத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் பலாலி கிழக்கு ஜே/253 கிராம சேவையாளர் பிரிவில் 429 குடும்பங்களும் பலாலி வடக்கு ஜே/254 கிராம சேவையாளர் பிரிவில் 495 குடும்பங்களும். வளலாய் ஜே/284 கிராம சேவையாளர் பிரிவில109 குடும்பங்களுமாக 1033 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமிகமலேந்திரன், யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தெல்லிப்பழை, உடுவில், கோபபாய் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர்.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலையடுத்து நலன்புரி முகாம்களில் வாழும் மக்களை அமைச்சர் தலைமையிலான குழுவினர் சென்று சந்தித்து கலந்துரையாடினர்.

அத்தோடு மக்கள் மீள் குடியேற்றப்படவுள்ள இடங்களை யும் இந்தக் குழுவினர் சென்று பார்வையிட்டனர் என்பது குறிப் பிடத்தக்கது. (எ-6)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



**யார் AF இல் French படிக்க முடியும்?**

திருமணம் மூலம் France, Canada... செல்வோர். வெளிநாடுகளில் தொழில் புரிய / கல்விகற்க செல்வோர். மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்... இங்கு வடமராச்சி. வன்னி. வவுனியா. மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற்றிட...
- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1, 2,3,4...
- *Teaching materials* are given with *free* of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE course)
- Elementary level - 2 (4 or 5 Months, 80 Hours, CERTIFICATE course) ஏற்கனவே கொஞ்சம் பிரெஞ் கற்றவர்களும் வழமைபோன்று இப்பிரிவில் இணைந்திடுங்கள்.
- International Diplomas : DELF A1, A2 - AF இல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. மேலும் இப்பரீட்சைகளை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும்.
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு. இறப்பு & திருமண சான்றிதழ்கள். மேலும் நூலக வசதி...

**குறிப்பு: நீங்கள் French கற்கும்** நிறுவனம் France அரசாங்கம் & French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்டதா? Exams, Certificates என்பன உண்மையில் பெறுமதியானதா? என்பவற்றை தெரிந்துகொள்ளும்போது உங்கள் பணமும் நேரமும் வீணாவதை தவிர்க்கலாம்.

➢ Just say "Yes, I can... speak French"
*AF is the only International Organization for French in Northern Province*

✓ AF இன் தலைமை நிறுவனம் Paris இலும் கிளைநிறுவனங்கள் இலங்கையில் COLOMBO, GALLE, KANDY, MATARA ஆகிய இடங்களில் மாத்திரமே உள்ளன. யாழில் FRENCH EMBASSY யின் அனுசரணையுடன் 1976 இல் இருந்து... உலகில் 136 நாடுகளில் 1040 Alliances Françaises (AF) உள்ளன. French Embassy website: www.ambafrance-lk.org

(545)

அனுமதியை பெற விரையுங்கள். உடன் (தொ.பேசி மூலமும்) பதிவுசெய்யுங்கள்

**61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்**

(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)


# பொதுநலவாய மாநாட்டுக்...

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கிறார்.

நேற்று மாலை காலியில் நடைபெற்ற பொதுநலவாய மக்கள் மன்றத்திலும் ஜனாதிபதி பங்கேற்றார். இவற்றையொட்டி காலி - ஹிக்கடுவை மற்றும் அம்பாந்தோட்டை நகரங்கள் விழாக்கோலம் பூண்டுள்ளதோடு விசேட போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் காலி கோட்டை நீதிமன்ற சதுக்கம் மற்றும் ஹிக்கடுவ சாயா டிரான்ஸ் ஹோட்டல்களிலும் நடைபெறவுள்ள இளைஞர் மற்றும் மக்கள் மாநாடுகளில் பொதுநலவாய தலைமை பதவியை ஏற்கவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர்கள் - உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும 14 ஆம் திகதி பல்வேறு மட்ட சந்திப்புக்களும் கூட்டங்களும் நடைபெறவுள்ளன. இதே வேளை பொதுநலவாய மக்கள் மன்றத்தின் மாநாடு நேற்றைய தினம் மாலை 5.00 மணிக்கு காலி கோட்டையிலுள்ள நீதிமன்ற சதுக்கத்தில் ஆரம்பமாகி இரவு 7.00 மணிக்கு நிறைவடைந்துள்ளது.

இதேவேளை பொதுநலவாய இளைஞர் மாநாடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ருகுனுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிறது.

இதில் 53 நாடுகளைச் சேர்ந்த 106 பிரதிநிதிகளும் 20 கண்காணிப்பாளர்களும் 5 செயலணி உறுப்பினர்களும் பங்கேற்கின்றனர். இலங்கையிலிருந்து 25 பிரதிநிதிகளும் 20 கண்காணிப்பாளர்களும் 5 செயலணிக் குழு உறுப்பினர்களும் பங்குபற்றவுள்ளனர்.

எட்டு முக்கிய தலைப்புகளில் இங்கு விடயங்கள் ஆராயப்படவுள்ளதோடு இலங்கை அரச தலைவர்களுக்கும் இளைஞர் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பும் நடைபெறவுள்ளன.

பொதுநலவாய வர்த்தக மாநாடு 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெறுகிறது. இதில் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 1300 முக்கிய வர்த்தகர்கள்- முதலீட்டாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

எதிர்வரும் 15 ஆம திகதி கொழும்பில் கோலாகலமாக நடைபெறவுள்ள அரச தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு கடந்த சனிக்கிழமை முதல் அரச தலைவர்களின் வருகை ஆரம்பமானது.

பொதுநலவாய உச்சிமாநாட்டை முன்னிட்டு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் தொடக்கம் அரச தலைவர்கள் கொழும்பில் தங்கியிருக்கவுள்ள ஹோட்டல்கள் வரை விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளும பலப்படுத்தப்பட்டுள்ளன. (எ-8)

# இலங்கை...

இதற்கு அப்பால் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் பிரதமர் முன்பாக உள்ளது.

எனவே பிரதமரின் பயணம் ரத்துக்கு ஒரே காரணத்தைப் பார்க்கக் கூடாது. பல காரணங்கள் இதில் உள்ளன. இலங்கையுடன் இந்தியாவுக்கு ஆழமான நட்பும், உறவும் உள்ளது.

எனவே [illegible] ஒரு விவகாரத்தால் அதில் மாற்றமோ, பாதிப்போ வராது என்று நான் கருதுகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-8)

# மன்மோகன் சிங்கின் முடி...

தெரிவித்தார்.

அவரது முடிபு எங்களுக்கு தோல்வி அல்ல, நாங்கள் அவரை அழைத்தோம், அவர வந்திருந்தால நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப் போம் என்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

கொழும்பில் நடககும் பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலநது கொள்ளாதிருக்க இந்தியப் பிரதமர் எடுத்துள்ள முடிபு இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவாக கருதப்பட முடியுமா என்று செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே ஜி.எல். பீரிஸ் இந்தப் பதிலைக் கூறினார்.

இதனிடையே, மன்மோகன் சிங்கின் முடிபுக்கு பல காரணங்கள் இருக்க முடியும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

எல்லா பொதுநலவாய மாநாட்டுக்கும் பிரதமர் போவதில்லை என்பதை மறந்து விடக்கூடாது என்று சல்மான் குர்ஷித் உள்ளூர் ஊடகமென்றுக்கு தெரிவித்துள்ளார்.

மன்மோகன் சிங் இலங்கை மாநாட்டில் கலந்துகொள்வாரா இல்லையா என்ற கேள்விகள் வலுத திருந்த நிலையில், தான் கலந்து கொள்வது உறுதி என்று வெளியுறவு அமைச்சர் குர்ஷித் ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்தியா பொதுநல மாநாட்டை முழுமையாக புறக்கணிக்க வேண்டுமென்று தமிழக அரசு சட்டமன்றத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# உண்மைகளை கண்...

புடன்இணைந்து ஊடகவியலாளர்களைச் சந்திக்க இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டே இவர்களை அரசாங்கம் இலங்கைக்குள் நுழைய அனுமதி வழங்காமல் நேற்றுப பிற்பகல் திருப்பி அனுப்பியுள்ளது.

கொழும்பில் பொதுநலவாய மாநாடு நடைபெறுகின்ற காலப் பகுதியில் இடம்பெறவிருந்த சட்டத்தரணிகளின் மாநாட்டில் பங்கேற்கவிருந்த சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் மனிதவுரிமை பிரதிநிதிகளுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி வழங்கிய நுழைவு அனுமதியை இலங்கை அரசாங்கம் இரத்துச் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-8)


## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கும் பூச்சு வேலைகளுக்கும் சிறந்த மணல் மண் விற்பனைக்குண்டு.

4½ ரக்டர் 17500

**தொடர்புகளுக்கு:- தீபன்**

**077 676 6499, 077 759 0792**

(சி-5436)

## YOGI'S

(Academy of beauty Culture Hair Dressing & Home Science)

**Cookery Demonstration Classes, 15 th, 16 th, 17 th November 2013**

**பண்டிகைக் கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புகள் 3 நாட்கள் மட்டும்**

**15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் காலை 10 மணிமுதல் நடைபெறும். இலகுவாகவும் வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யக்கூடிய**

- 5 கேக் கலவைகள்
- 5 பேஸ்ரி வகைகள் (Pastryies)
- 5 Sweets வகைகள்

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளவும்.

75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**தொ.பே: 021 222 2796, 0777164923**

(C-5423)

## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-5439)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062

## IELTS BRITISH COUNCIL

யாழ்ப்பாணத்தில் 02-02-2014 நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்



* Strategies and techniques are taught to gain a higher score
* All 4 skills are paid equal attention
* Special attention to weak students
* 60 hours of learning in 8 weeks
* Affordable charges

★ கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்

★ இலங்கையில் IELTS பயிற்சி நிலையங்களில் தலைசிறந்த நிலையங்களில் ஒன்றென British council ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஆகும்

**THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5**

**புதிய பிரிவுகள் 16-11-2013 இல் ஆரம்பமாகும்**

Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00-11.00 | 4.00-6.00-6.00-8.00 |

கடந்த 10 வருடங்களாக No.143-Adiyapatham Road Thirunrlveli. யில் பணியாற்றி இப்போது No.#192 Navalar road இல் பணியாற்றுகின்றோம்.

## BRITISH COLLEGE OF ENGLISH

No. 192, Navalar Road, Jaffna.

(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)

Tel : 075 543 5089 , 077 880 3887


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.